வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.08.2022 சனிக்கிழமை | இதழ் : 242 | பக்கங்கள் : 16




# அடுத்த ஆறு மாதங்கள் மிகவும் கடினமானவை!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஒகஸ்ட் 06

**“நாட்டில் அடுத்து வரும் 6 மாதங்கள் மிகவும் கடினமான காலமாகவும், ஒருபோதும் அனுபவித்திராத காலமாகவும் இருக்கும். இந்தக் காலப் பகுதியை கடந்தே ஆகவேண்டும். திரும்பி வர முடியாது”, இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைகள் வெளியீட்டு விழா நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த விழாவில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முதலில் நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும். இரண்டாவது, நிலையான கடன் ஒன்றைப் பெறுவது. இந்தக் கடனைப் பெறுவது தொடர்பில் எவருக்கேனும் ஆலோசனைகள் இருந்தால் அது இலகுவாக இருக்கும். நாம் இந்த

15

# ‘கோட்டா கோ கம’ கூடாரங்கள் இப்போதைக்கு அகற்றப்படாது

## சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, ஒக. 06

உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாததால் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை அந்த பகுதியிலிருந்து அகற்றப் போவதில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் மேல்முறையீட்டு நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபருக்காக முன்னி

15

# அரச ஊழியர்களுக்கு மட்டுமே இன்று எரிபொருள் விநியோகம்!

## யாழ். மாவட்ட அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக. 06

யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும். இதனால், இன்றைய தினம் பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்கப்படாது என்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரி

15

# சர்வகட்சி நிர்வாகம் வந்தால் பங்காளியாகவதற்கு தயார்!

## ஜனாதிபதிக்கு சஜித் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 06

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை தீர்ப்பதற்கு சர்வகட்சி அரசாங்கமல்ல, சர்வகட்சி நிர்வாகமொன்றே ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்த நிர்வாகத்தின் கீழ் பாராளுமன்ற கண்காணிப்பு குழுக்களை நியமித்து அதன் ஊடாக நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்பதற்கு தாம் தயாக இல்லை என்றும், சர்வகட்சி நிர்வாகத்தில் நியமிக்கப்படவுள்ள பாராளுமன்ற கண்காணிப்பு குழுக்களுக்கு அதிகாரம் மிக்க தலைமைத்துவத்தை வகிக்க தயார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சர்வகட்சி அரசாங்கத்தை

15

# கியூ. ஆர். குறியீட்டு பதிவு இரு நாட்கள் தடைப்படும்!

கொழும்பு, ஒக. 06

கியூ. ஆர். குறியீட்டை புதிதாக பதிவு செய்து பெறுவது அடுத்த 48 மணி நேரங்களுக்கு தடைப்படும் என்று நேற்று மாலை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்துத் துறையின் திட்டமிட்ட பராமரிப்புப் பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஏற்கனவே கியூ. ஆர். குறியீட்டை பதிவு செய்து பெற்றவர்களுக்கு இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஒக்ரோபர் 13இன் பின்னர் ரணில் பதவி விலகுவார்!

## பிரபல சோதிடர் கணிப்பு

கொழும்பு, ஒக. 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜாதகப்படி ஒக்ரோபர் 13ஆம் திகதிக்கு பின்னர் பதவியை விட்டு விலக நேரிடும் என்று பிரபல சோதிடர் கே. ஏ. யு. சரச்சந்திர தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப இன்னும் மூன்று மாதங்களுக்கு நாட்டில் அரசியல் உறுதியற்ற நிலையும் பொருளாதார உறுதியற்ற தன்மையும் நிலவும்.

சோதிட சாஸ்திரத்தின் பிரகாரமே தான் இவை

15



# கனிமொழியை மிலிந்த திடீரென சந்தித்து பேச்சு

புதுடில்லி, ஒக. 06

தமிழ்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினரான கனிமொழியை இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேசினார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில்

15

# ஜனநாயக வழியில் ஆட்சியை பிடிப்பேன்!

## ஜே. வி. பி. விஜயவீரவின் புதல்வர்

கொழும்பு, ஒக. 06

ஜனநாயக ரீதியில் ஆட்சியை கைப்பற்றுவேன் என்று ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே. வி. பி.) மறைந்த முன்னாள் தலைவர் ரோகண விஜயவீரவின் மகன் உவிந்து விஜயவீர தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியில் ஜே. வி. பி. ஆதரவாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15

# சீன கப்பல் விவகாரம்: அமெரிக்க - இலங்கை நட்புறவிலும் விரிசல்!

கொழும்பு, ஒக. 06

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவுள்ள ‘யுவான் வாங் 5’ கப்பல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு கடும் எதிர்ப்பை தெரிவிக்க அமெரிக்க அரசாங்கம் தயாராகி வருகிறது என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆட்சேபனையை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் நாளைக்குள் வெளியிடுவார் என்று பெரும்பாலும்

15

# வார இறுதிநாட்களில் மின்வெட்டு இல்லை!

கொழும்பு, ஒக. 06

வார இறுதி நாட்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, இன்று சனக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மின்

15

# ஆஸிக்கு சட்டவிரோதமாக சென்ற 46 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்!

கொழும்பு, ஒக. 06

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்த 46 இலங்கையர்களுடன் கப்பல் ஒன்று நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்த டைந்தது.

இவ்வாறு நாடு கடத்தப்பட்ட 46 பேரும் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்டபோது அந்நாட்டின் எல்லைப் படையினரால் கைது செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்தவர்களாவர்.

சட்டவிரோத மாக குடியேற முயன்றவர்களை அவுஸ்திரேலிய எல்லைப்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஐக்கிய தேசியக் கட்சி இன்று இரண்டு கட்சிகளாக நிற்கின்றது. தொடர்ச்சியாக பல தேர்தல்களில் தோல்வியடைந்த போதிலும், கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விலகுவதற்குத் தயாராக இல்லாததும், கட்சி இரண்டாவதற்கு காரணமானது.

இரண்டாயிரத்து ஐந்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தாலும், அதன் பின்னர், விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நிறைவு செய்து வைத்ததைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷக்களை விழுத்துவதற்கு, தான் பொருத்தமான ஆள் அல்ல என்பதை அவர் ஏற்றுக்கொண்டு ஒருதடவை சரத் பொன்சேகாவையும் மீண்டும் மைத்திரிபால சிறிசேனவையும் பொதுவேட்பாளராக ஏற்றுக்கொண்டார்.

ரணிலுடன் இருக்கும்வரை தனக்கு எதிர்காலம் இல்லை என்ற முடிவோடு சஜித் பிரேமதாஸ தனி ஆவர்த்தனம் எடுத்துக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் களம் கண்டபோதிலும் அவராலும் வெற்றிபெறமுடியவில்லை.

ஆனால், அவரின் அந்த பிரிப்பு, ஐக்கிய தேசியக் கட்சி என்ற பெரிய "யானை"யையே சரித்துப் போட்டிருந்தது.

யானை என்றதும் அந்த விபத்துத்தான் ஞாபகத்திற்கு வருகின்றது. ஏ - ஒன்பது வீதியில் ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த வான் ஒன்று யானை மீது மோதிவிட்டு தப்பி ஓடிவந்துவிட்டது. அடிக்கடி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் அந்த வான், மற்றுமொரு நாள் அந்த விபத்து நடைபெற்ற பாதையால் சென்றபோது காத்திருந்த அந்த யானை, வானை மறித்து, தாக்குதல் நடத்தியதாம்.

இப்போது, அதேபோல ஐக்கிய தேசியக் கட்சி என்ற யானை (கட்சியின் சின்னமும் யானைதான்) தன்னை அடித்துப் போட்டவர்கள்மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியிருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்த பின்னரும், தனக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தில் யாரை பாராளுமன்றம் அனுப்புவது என்பதில், ரணில் பொறுமை காத்தார். பொறுமை என்றால் மகா பொறுமை அது. தேசியப் பட்டியலில் தெரிவாகும் உறுப்பினரை இத்தனை நாட்களுக்குள் தெரிவு செய்யவேண்டும் என்பது நமது அரசியலமைப்பில் தெளிவுபடுத்தப்படாததை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட ரணில், அந்த இடத்துக்கு அவரை நியமிக்கவிருக்கிறார், இவரை நியமிக்கவிருக்கிறார் என்று பலரும் ஆருடம் சொல்லிக்கொண்டிருக்க, அவற்றையெல்லாம் கருத்தில் எடுக்காமலே யாரையும் நியமிக்காமல் இருந்து வந்தார்.

அப்போதே அவர் அந்த இடத்துக்குத் தன்னை நியமித்து பாராளுமன்றம் வந்திருப்பாரேயானால், அவரைப் பலரும் கேலி செய்திருப்பார்கள். ஆனால், கோட்டாபய அரசு, நாட்டை கொண்டுநடத்த முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்தபோது, ரணில் வந்தால் மாத்திரமே இனி நாட்டை நிமிர்த்த முடியும் என்ற நிலைமை தோன்றியபோது பலத்த கரகோஷத்துடன் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

அவர் உள்ளே வந்ததும், நிதி அமைச்சை பாரம் எடுங்கள் என்று அப்போதைய பிரதமர் மகிந்த அவரை வலியுறுத்தியபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் அமைதி காத்த ரணில், பின்னர் பிரதமராகி, இப்போது ஜனாதிபதியுமாகி, தான் யார் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இது நாட்டுக்கு அல்ல, அவரோடு இருந்துவிட்டு அவர் எதற்கும் இனி சரிவரமாட்டார் என்று நம்பிக்கொண்டு அவரைவிட்டு வெளியேறிய தனது சகாக்களுக்கே தன்னை யார் என்று தெரிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் எதற்கு என்று நீங்கள் நினைக்கலாம். இப்போது, அவரைவிட்டு வெளியேறிய அவரது பழைய நண்பர்கள் பலர், ஐக்கிய மக்கள் சக்தியையே கலைத்துவிட்டு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சங்கமமாகினால் என்ன என்று சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனராம்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளராக நீண்டகாலம் இருந்த கபீர் காசிம் போன்ற தலைவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இப்படியொரு யோசனையை முன்வைத்திருக்கின்றனர் என கொழும்பு ஊடக நண்பர் ஒருவர் தகவல் சொன்னார்.

இது ஒன்றும் ரணில்மீதான பிரசாரம் அல்ல. ஐக்கிய மக்கள் சக்திக்குள் நடக்கும் உள்வீட்டு சமாச்சாரம் ஒன்றை தெற்கின் ஊடகர் ஒருவர் பகிர்ந்திருந்தார். அதனை உங்களுக்கு தருவது மாத்திரமே இந்தப் பத்தியின் நோக்கம்.!

- ஊர்க்குருவி.

# யாழ். போதனா மருத்துவமனையில் பொதுமக்களுக்கு புதிய விதிமுறைகள்!

யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக விடுதிகளில் சேர்க்கப்படும் நோயாளர்கள் மற்றும் அவர்களை பார்வையிட வருபவர்கள் பின் பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து யாழ். போதனா மருத்துவமனை அறிவித்துள்ளது.

மருத்துவமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் தொழில்சங்கங்களுக்கும் பணிப்பாளருக்கும் இடையே நடந்த கலந்தரையாடலில் வைத்தியசாலை செயல்பாடு சுமுகமாக நடைபெறும் நோக்கில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, மருத்துவமனையில் உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வைத்திய சாலையின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது எனவும் கூறப்பட்டது.

இதன்படி பொது மக்களுக்கு 8 முக்கிய அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

அவையாவன, நோயாளர்களை பார்வையிடுவதற்கு பார்வையாளர் நேரத்தில் இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர், நோயாளருடன் வீடுதிகளில் உதவிக்காக ஒருவர் மட்டுமே தங்கி நிற்க முடியும், வைத்தியசாலை வளாகத்துக்குள் போதைப்பொருள் அல்லது மது பாவித்தவர்கள் எக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களோ அல்லது உதவியாளர்களோ இரவு 7.30 மணிக்கு பின்னர் வைத்தியசாலையை விட்டு வெளியேற அனுமதிக்கபட மாட்டார்கள்,

விடுதிகளில் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் தங்கள் கடமைகளில் ஈடுபடும் போது உதவியாளர்கள் விடுதியை விட்டு வெளியேறி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வைத்தியசாலைக்குள் வருபவர்கள் மற்றும் மருத்துவமனை சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நடந்து கொள்ள வேண்டும், நோயாளரை பார்வையிடுவதற்கு குழுக்களாக வருகை தருபவர்கள் எக்காரணம் கொண்டும் விடுதிகளுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள், வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வதற்கு பூரண ஒத்திவைப்பு வழங்க வேண்டும். (ஐ-3)

# குரங்கு அம்மை தொற்றுக்கு முகங்கொடுக்க நாடு தயார்

### தொற்று நோய் ஆய்வுப் பிரிவு கூறுகிறது

கொழும்பு, ஓக. 06

குரங்கு அம்மை தொற்றுக்கு முகங்கொடுக்கத் தயாராகவுள்ளதாக தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு பிரதானி விசேட வைத்தியர் சமித கினிகே இதனைத் தெரிவித்தார்.

குரங்கு அம்மை தொற்று நாட்டில் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரை நாட்டில் குரங்கு அம்மை தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நீச்சல் தடாகத்திலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, ஓக. 06

முல்லைத்தீவு நகரில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றின் விடுதியின் நீச்சல் தடாகத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த ஹோட்டலில் பணியாற்றிவரும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞரே நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரைக் காணவில்லை என்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை ஹோட்டலின் நீச்சல் தடாகத்தில் சடலம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஹோட்டலின் உரிமையாளர் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த முல்லைத்தீவுப் பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

# மேலும் 10 இலங்கை தமிழர் தனுஷ்கோடி மணல் திட்டில்!

சென்னை, ஓக. 06

இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழ்நாட்டுக்கு சென்ற மேலும் 10 தமிழர்கள் தனுஷ்கோடி அருகே மணல் திட்டில் தஞ்சமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான சூழ்நிலையால் இலங்கையைச் சேர்ந்த மேலும் 10 தமிழர்கள் தனுஷ்கோடி அடுத்துள்ள ஐந்தாவது மணல் திட்டில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிய வந்தது. இது தொடர்பில் கிடைத்த தகவலையடைத்து அவர்களை மீட்க இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமாக ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பல் தனுஷ் கோடி மணல் திட்டுக்கு விரைந்தது.

## வார இறுதி நாட்களில் மின் வெட்டு இல்லை!

கொழும்பு, ஓக. 06

வார இறுதி நாட்களில் மின் தடை இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய,

இன்றும் நாளையும் குறித்த மின் தடை இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ்.குடாநாட்டில் பொதுமக்களுக்கு இன்று எரிபொருள் வழுங்கப்படாது

யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்.மாவட்டத்தில் இன்று பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட மாட்டாது என மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 23 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 06 எரிபொருள் நிரப்புநிலங்களில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் மிகுதி 17 எரிபொருள் நிரப்ப நிலையங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ள தன் காரணமாக இன்று பொது மக்களுக்கான எரிபொருள் விநியோகம் இடம்பெறமாட்டாது என யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
06.08.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜனாதிபதியின் பொறுப்பு?

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டிருப்பது, தமிழ் கல்வி சமூகத்தினர் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்மீது, அதிருப்திகளையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. ஜோசப் ஸ்டாலினும், ஏற்கனவே கைது செய்யப பட்டிருக்கும் போராட்டக்காரர்களும் ஒன்றல்ல. எனவே, இது போன்ற கைதுகள், ஜனநாயகத்தின் மீதான பற்றுதியை பாதிக்கும். இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

'அரகலய'காரர்களின் அமைதிவழியான போராட்டம் கொழும்பின் அதிகார மையத்தை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றது. உண்மையில், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதற்கான சூழ்நிலையை உருவாக்கியவர்களும் அவர்கள்தான். கோட்டாபய ராஜபக்ஷக்கு எதிரான போராட்டத்தால் உச்ச அளவில் பயன்பெற்றவர் ஒருவரை கைகாட்ட முடியுமென்றால், அது நிச்சயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். பொருளாதார நெருக்கடிதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான கிளர்ச்சிக்கான அடிப்படையாகும்.

2019இல், 69 இலட்சம் சிங்கள மக்களின் ஆதரவை பெற்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷ, தூரநோக்கற்ற வகையில், மேற்கொண்ட கொள்கை முடிவுகள், பாரதூரமான பின்னடைவுகளுக்கு வழிவகுத்தன. தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வை முன்வைக்க முடியாத சூழலில் தான், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கான சூழல் கனிந்தது. அரசாங்கத்தை எதிர்ப்பதற்கான வாய்ப்புக்களை தேடிக் கொண்டிருந்தவர்கள் தங்களுக்குள் ஒன்றிணைந்தனர்.

ஆரம்பத்தில் அமைதி வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஒரு கட்டத்தில், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கிளர்ச்சி நடவடிக்கைக் கான தோற்றத்தைப் பெற்றது. இந்தச் சூழல், போராட்டக்காரர்களுக்குள், பல வகையானவர்களும் உள்நுழைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. இந்தப் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து, அரச சொத்துக்களை ஆக்கிரமித்தவர்கள் என்னும் அடிப் படையில், அடையாளம் காணப்பட்டவர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருக் கின்றனர். இன்னும் பலர் தேடப்பட்டு வருகின்றனர். இந்த பின்புலத்தில்தான், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இது கண்டிக்கத்தக்க ஒரு செயல். ஆனால், இதனை தேவையற்ற வகை யில் கட்சி அரசியலாக்குவதும் சரியல்ல.

அடையாளம் காணப்பட்டவர்கள் சிலரை கைது செய்யும் நடவடிக்கைகள், ஜனநாயகத்தை சீர்குலைப்பதாக இருந்துவிடக்கூடாது. அதேவேளை, அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கின்றபோது, சட்டம் ஒழுங்கை சிலர் துஷ்பிரயோகம் செய்வதற்கும் இது வாய்ப்பாகிவிடலாம். இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் கொள்ள வேண்டும். இதேவேளை போராட்டக்காரர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்மீதான கைது நடவடிக்கை ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் ஒரு நடவடிக் கையாகவே நாம் கருத வேண்டியிருக்கின்றது. அரசாங்கம் போராட்டக் காரர்களை ஓர் எல்லைக்குள் முடக்குவதற்கு, இவ்வாறான கைதுகள் பயன் படக்கூடுமென்று கருதலாம். ஆனால், இவ்வாறான கைதுகள் எதிர் மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

ரணில் விக்கிரமசிங்க அடிப்படையில் தாராளவாத அரசியல் பின்புலம் கொண்ட ஒருவர். மேற்குலக தாராளவாத விழுமியங்களின் அடிப்படை யில் நாட்டை முன்கொண்டு செல்லும் திட்டங்கள் தொடர்பில் பேசிவருப வர். இவ்வாறான அரசியல் முகத்தை கொண்டிருக்கும் ஒருவர், ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் நோக்கிலான விடயங்களை கைக்கொள்வது, ஜனாதிபதி தொடர்பான பார்வையில் கீறல்களையே ஏற்படுத்தும். ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமான ஒன்று.

# 'அரகலயவுக்கு நிறைவு'!

- அலசுவது இராஜதந்திரி -

*'அரகலய' என்றழைக்கப்பட்ட காலிமுகத்திடல் சாத்வீக போராட்டம் மூன்று மாதங்களுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் மாலை முடிவுக்கு வந்திருந்தது.*

*கடந்த மே மாதம் 9ஆம் திகதி அரகல சாத்வீக போராட்டம் இலங்கை எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் விதத்தில் ஆரம்பமாகியிருந்தது. ஆனால், இதன் பின்னணியில் பலதரப்பட்ட சக்திகளும் பல்வேறு அரசியல் நோக்கங்களும் இருந்துள்ளதென்பதே அரசியல் அவதானிகளின் கணிப்பாக இருக்கின்றது.*

*காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே பொறுப்பாளியாவார் என்று கூறியபடியே தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் அரகல ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் இடம்பெற்ற பேரணிகள், வன்முறைகள் என்பவற்றால் எற்பட்ட அழுத்தங்களையடுத்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டே தப்பிச்செல்ல வேண்டிய நிலை உருவாகியிருந்தது. பிரதமராக இருந்த அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஷவும் பதவி விலக நேரிட்டது.*

*கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்தும் அவரின் சகோதரர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்தும் விலகியதையடுத்து ரணில் விக்கிரமசிங்க*

*பிரதமரானதோடு தற்போது ஜனாதிபதியாகவும் தம்மை உயர்த்தியுள்ளார். இருந்தபோதிலும் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதும் நம்பிக்கையை இழந்த வகையிலேயே கோஷங்களை அவர் பதவியேற்ற நாள்முதல் கூறிவருகின்றனர்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அதிகாரங்களைப் பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்தமை விளங்குகின்றது.*

*காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலைப்பதற்கு கையாண்ட முயற்சி தவறான அணுகுமுறையைக் கொண்டதாக இருந்தமையினால் அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்ததோடு தென்னிலங்கையில் வன்முறைகளை வெடிக்கச் செய்திருந்தது.*

*ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்ற கையாண்ட அணுகுமுறை நன்கு திட்டமிடப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களை பலவீனப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.*

*அதன் வெளிப்பாடாகவே நேற்று முன்தினம் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றதோடு அவர்கள் காலிமுகத்திடலில் போட்டிருந்த கூடாரங்களையும் அகற்றியிருந்தனர்.*

*காலிமுகத்திடல் "கோட்டா கோ கம" ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களின் ஆர்ப்பாட்டங்களை நிறைவு செய்வதற்கு காலக்கெடுவையும் நேற்று மாலை ஐந்து மணிவரை ஜனாதிபதி விதித்திருந்தார்.*

*ஆனால், அவர் விதித்த காலக்கெடுவுக்கு*



*முன்பதாகவே கோட்டா கோ கம ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்திருந்தது. கோட்டா கோ கம ஆர்ப்பாட்டம் ஆரம்பித்தது முதல் நேற்று அந்த ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது வரையான மூன்று மாத காலப்பகுதியில் பாரியளவிலான வன்முறைகள் ஏற்படாவிட்டாலும் குறிப்பிடத்தக்களவில் இடம் பெற்ற வன்முறைகளுக்கு மத்தியில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் இருந்த ராஜபக்ஷ சகோதரர்கள் பதவி இறக்கப்பட்டிருந்தனர்.*

*நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு எதிரான போராட்டமே கோட்டா கோ கம போராட்டம் என்று குறிப்பிடப்பட்டிருந்த போது அந்தப் போராட்டத்துக்கு நாடளாவிய ரீதியில் ஆதரவும் வலுத்திருந்தது. ஆனால், ஆரம்பத்தில் பலரின் கவனத்தை பெற்றிருந்த அப்போராட்டம் கடந்த சில வாரங்களாக அதன் முக்கியத்துவத்தை இழக்கும் விதத்திலும் அமைந்திருந்தது.*

*ஒரு குறிப்பிட்ட கால எல்லையோடு அரச தரப்பில் மாற்றங்களும் ஏற்பட ஆரம்பித்ததையடுத்து கோட்டா கோ கம ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டிருக்கலாம்.*

*ஆனால், அவ்வாறில்லாமல் ஓர் எல்லை மீறிய போராட்டமாக மாறும் சூழ்நிலையை காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் அடைந்த நிலையில் தற்போது அச்சுறுத்தல்களையும் எதிர் நோக்கிய நிலையில் அப்போராட்டம் கலைந்து போயுள்ளது.*

*ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினுள் பிரவேசித்து அதன் மாண்பைக் குன்றச்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை மற்றும் ஜனாதிபதி செயலகத்தினுள் புகுந்து குழப்பங்களை ஏற்படுத்தியமை போன்றவை யாவும் அமைதிவழி ஆர்ப்பாட்டத்தின் முக்கியத்துவத்தை குறைத்து எடைபோட வைப்பவையாகவும் அமைந்திருந்தன.*

*இத்தகைய பின்னணியில் தற்போது கடந்த சில தினங்களாக கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் பத்துக்கும் மேற்பட்ட இனந்தெரியாதோரின் சடலங்களும் காலிமுகத்திடல் கரையோரங்கள் உட்பட பல்வேறு இடங்களிலும் போடப்பட்டிருந்தன.*

*இதுதவிர, காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைகளும் ஆரம்பமாகி சில முக்கிய புள்ளிகள் கைதாகியும் உள்ளனர்.*

*எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள காலக்கெடு பலதரப்பட்ட அர்த்தங்களையும் செய்திகளையும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வழங்கியுள்ள நிலையிலேயே கோட்டா கோ கம கலைந்து போயுள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 06 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 21
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**
உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கோயில் தரிசனம் மகிழ்ச்சி தரும். உங்களின் விருப்பம் இன்று நிறைவேறும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சந்தோஷம் அதிகரிக்கும்.

**இடபம்**
தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்னை தீரும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.நண்பர்களின் துணையுடன் புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் எண்ணம் இன்று நிறைவேறும்.

**மிதுனம்**
உங்களிடம் புதிய உற்சாகம் தோன்றும். குடும்ப பிரச்னைகளை சரி செய்வீர்கள். பெரியோரின் ஆதரவு கிடைக்கும்.அமைதியாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். நிதி நிலை உயரும்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தீட்டி செயல்பட ஆரம்பிப்பீர்கள். திருப்பு முனையான நாள். குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. உங்களின் செல்வாக்கு உயரும்.

**சிம்மம்**
எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. தொழிலில் இருந்த சிக்கல்களை சரி செய்வீர்கள். வருமானம் கூடும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பெரியோரின் ஆதரவு உண்டு.

**கன்னி**
குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான நிலை உண்டாகும்.நிதிநிலை குறித்த எண்ணம் மேலோங்கும். புதிய முயற்சி ஒன்றில் இறங்குவீர்கள். பிறரால் பாராட்டப்படுவீர்கள்.

**துலாம்**
உங்கள் அணுகுமுறையால் நீண்ட நாள் பிரச்னை இன்று முடிவுக்கு வரும்.மனதில் உற்சாகம் கூடும். விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள். குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
குழந்தைகளின் நலனுக்காக முயற்சிகள் மேற்கொள்வீர்கள். அலைச்சல் கூடும்.குடும்ப செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் எதுவும் இன்று வேண்டாம்.வழக்கமான செயல்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு**
எதிர்பார்த்த வருவாய் உங்களைத் தேடி வரும். ஆதாயமான நாள். செயல்களில் விவேகம் இருக்கும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். குடும்பத்தினரிடம் ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும்.

**மகரம்**
தொழிலை விருத்தி செய்வதற்காக புதிய முயற்சியில் இறங்குவீர்கள். முதலீடுகள் செய்திருந்தவற்றில் ஆதாயமான நிலை ஏற்படும். வருவாய் கூடும். நீண்ட நாள் வேலையை இன்று செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
தந்தை வழி உறவுகளின் ஆதரவுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்களுடைய எண்ணங்களில் ஒன்று நிறைவேறும். விரும்பியதை அடைவீர்கள். கோயிலுக்கு சென்று வருவீர்கள்.

**மீனம்**
வெளியூர் பயணங்களால் சங்கடங்கள் உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும். உங்களின் உடல் சோர்வடையும். மனம் அமைதியை நாடும். உங்களைப் புரிந்து கொள்ளாமல் சிலர் உங்கள் மீது கோபம் கொள்வார்கள்.

# சசிகலா தரப்பினருடன் சேர்ந்து செயல்பட ஓ. பி. எஸ் தரப்பு முடிவு

சென்னை, ஓக. 06

ஓ. பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களை திரட்டி பலப்படுத்தும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். கட்சியில் பின்னடைவை சந்தித்தது போல் நீதிமன்ற வழக்குகளிலும் தொடர்ந்து பின்னடைவையே சந்தித்து வருகிறார். இருப்பினும் அ.தி.மு.க.வை கைப்பற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் பெரும்பான்மையினர் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள்.

இது கடந்த மாதம் நடைபெற்ற பொதுக்குழுவில் வெளிப்படையாகவே தெரிந்தது. மொத்தமுள்ள 1,665 பேரில் 1,400 பேர் வரை எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக கையெழுத்துப் போட்டனர். இந்த ஆதாரங்களை எடப்பாடி பழனிசாமி தேர்தல் ஆணையத்துக்கும் அனுப்பி வைத்துள்ளார்.



இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வமும் பொதுக்குழு கூட்டத்தை கூட்ட திட்டமிட்டுள்ளார். இதுபற்றி ஓ.பன்னீர்செல்வம் தரப்பு மாவட்ட செயலாளர்களில் ஒருவரான கோவை செல்வராஜ் கூறும் போது, "விரைவில் பொதுக் குழு கூட்டம் நடத்தவும், பிரமாண்ட பொதுக்கூட்டம் நடத்தவும் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் திட்டமிட்டுள்ளார். அடிமட்டத்தில் கட்சியை வலுப்படுத்தவும் பணிகளை வழங்கியிருக்கிறார்" என்றார்.

இதனிடையே சசிகலா மற்றும் டி. டி. வி. தினகரன் ஆதரவாளர்களுடம் இணைந்து செயல்படும்படி கூறி இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் தேனி மாவட்டத்துக்கு சென்ற தினகரனுக்கு ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் வரவேற்பு அளித்தனர்.

மேலும் சில மாவட்டங்களில் சசிகலா, தினகரன் ஆகியோர் சென்றால் வரவேற்பு அளிக்கவும் முடிவு செய்துள்ளார்கள். சசிகலாவும் தனது ஆதரவாளர்களிடம் அ.தி.மு.கவினர் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற தனது விருப்பத்தைதெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமி தரப்பிலும் சில மூத்த தலைவர்கள் ஓ.பி.எஸ்., சசிகலா எல்லோரும் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்று கட்சியை வலுப்படுத்த வர வேண்டும் என்று கூறியுள்ளனர். (ஐ)

# கலைஞர் கருணாநிதி புகழை யாராலும் மறைக்க முடியாது!

சென்னை, ஓக. 06

கருணாநிதியின் புகழை மறைத்துவிட யாராலும் முடியாது. நாளை அவரின் நான்காவது நினைவு தினத்தில் பேரணியாக சென்று அஞ்சலி செலுத்த வருமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நம் இதயத்துடிப்பாக விளங்கி, இயக்கத்தை எப் போதும் வழி நடத்துவதற்கும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கான திட்டங்களை முறையாகச் செயல்படுத்துவதற்கும் முழுப் பேராற்றலாக விளங்கும் நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு ஓகஸ்ட் 7 அன்று நான்காம் ஆண்டு நினைவு நாள். நம்மை அவர் விட்டுச் சென்று நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டனவா என நினைத்தபோது இதயம் ஒரு நொடி நின்றுவிட்டது. அவரா? நம்மை விட்டுப் பிரிவதா? கணப்போதும் அகலாமல், நெஞ்ச மெல்லாம் நிறைந்திருந்து, நம்மை உயிர்ப்போடு இயக்கிக் கொண்டிருப்பவரே முத்தமிழறிஞர் கலைஞர்தானே என்று நினைத்ததும், நின்று போன இதயம் அடுத்த நொடியிலிருந்து மீண்டும் துடித்தது. ஆம். தலைவர் கலைஞர்தான் ஒவ்வொரு நொடியும் நம் நினைவெல்லாம் நிறைந்திருக்கிறார்.



உடன்பிறப்புகளாகிய உங்களில் நானும் ஒருவன் என்பதால் அனைவரும் ஒருங்கி ணைந்து களப்பணியாற்றி, மக்களின் அன்புடனும் ஆதரவுடனும் தி.மு.கழகத்தை ஆட்சியில் அமர வைத்து, 10 ஆண்டுகளாக இருண்டு கிடந்த தமிழ்நாட்டை உதயசூரியனால் விடியச் செய்து, பல்வேறு துறைகளிலும் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக உயர வைத்து, அத்தகைய வெற்றியையும் சாதனைகளையும் பேரணியாகச் சென்று முத்தமிழறிஞர் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கும் வாய்ப்பு இந்த ஆண்டு ஓகஸ்ட் 7ஆம் நாள், அவரது நான்காம் ஆண்டு நினைவு நாளில் அமையவிருக்கிறது - என்றார்.

# தமிழக முதல்வருக்கு சிங்களவர் கடிதம்!

சென்னை, ஓக. 06

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு இலங்கையில் இருந்து 63 வயது சிங்களவர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, தமிழகத்திலிருந்து நிவாரணப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படும் என, முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இதன்படி, முதல் கட்டமாக சென்னையிலிருந்து கப்பலில் கடந்த மே 18 ஆம் திகதி ரூ. 32.94 கோடி மதிப்பிலும், 2ஆம் கட்டமாக தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து ரூ. 67.70 கோடி மதிப்பிலும் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டன.

இந்த நிலையில் கடந்த மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 3ஆம் கட்டமாக விடிசி சன் என்ற கப்பலில் ரூ. 54 கோடி மதிப்பிலான 16,500 தொன் அரிசி, ரூ. 6 கோடி மதிப்பிலான 250 தொன் பால் மா, ரூ. 14 கோடி மதிப்பிலான 50 தொன் உயிர் காக்கும் மருந்துகள் என மொத்தம் ரூ. 74 கோடி மதிப்பிலான 16,800 தொன் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டன. இந்நிலையில், முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு இலங்கையில் இருந்து 63 வயது சிங்களவர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், நான் சபரகமுவா மாகாணத்தின் கேகாலையை சேர்ந்த சிங்களவர். என் வயது 63. நான் பௌத்த மதத்தை பின்பற்றுபவன். இந்த கடினமான சூழ்நிலையில் தாங்கள் அரிசி வழங்கியதற்கு உங்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி.

இதய நோயாளிகளான நானும், என் துணைவியும் 10 கிலோ அரிசி பையை பெற்றுக் கொண்டோம்.

நாட்டில் நிலவும் சூழலால் அன்றாட வருமானத்தை இழந்துள்ளோம். இதயத்தின் அடிமனதில் இருந்து உங்களுக்கும், தமிழ்நாட்டு மக்களும் மிக்க நன்றி.

இலங்கை வாழ் மக்கள் மீதான இரக்கத்திற்கு மிகுந்த நன்றி. அன்புடன், விஜித விக்கிரமசிறி என்று தெரிவித்துள்ளார்.

# யாழில் அதிக விலைக்கு அரிசி விற்றவர்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 06

யாழ்ப்பாணத்தில் அரிசியின் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கும், சமையல் எரிவாயு சிலிண்டரை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவருக்கும் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

குறித்த மூன்று வர்த்தகர்களும் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புகொண்டமையை அடுத்து மூவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாதண்டம் அறவிடப்பட்டுள்ளது. மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. இதன்போதே பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்த மூன்று வர்த்தகர்கள் சிக்கியுள்ளனர். (அ)

# சுற்றுலாத்துறை தூதுவராக சனத் ஜயசூரிய நியமனம்!

கொழும்பு, ஒக. 06

இலங்கையின் சுற்றுலாத் தூதுவராக இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்விமான்கள் பலரின் பங்களிப்புடன் சுற்றுலா ஆலோசனை சபையொன்று உருவாக்கப்பட்டு, அந்த ஆலோசகர்களுக்கான நியமனங்கள் உத்தியோகபூர்வமாக அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கையின் சுற்றுலாத் துறை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள வேளையில், சுற்றுலாத் துறை அமைச்சு தொழில்துறையை மேம்படுத்த பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. (அ)

# தொடர் துப்பாக்கிச் சூடுகள் தீவிர விசாரணை வேண்டும்

## அநுரபிரியதர்சன யாப்பா வலியுறுத்தல்

கொழும்பு, ஒக. 06

நாட்டில் இடம்பெறும் தொடர் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் பின்புலம் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுரபிரியதர்சன யாப்பா வலியுறுத்தினார்.

நாட்டில் கடந்த இரு மாதங்களுக்குள் 21 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா இவ்வாறு வலியுறுத்தினார்.

உரிய விசாரணையை முன்னெடுத்து, உண்மையைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)




# ஜோசப் ஸ்டாலின் கைதுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஒக. 06

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மக்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் போராடும் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதை வன்மையாக கண்டிக்கிறோம், ஜோசப் ஸ்டாலின் உட்பட ஜனநாயகப் போராட்ட செயற்பாட்டாளர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய், ஸ்ரீலங்கா அரசின் பாசிசவாதத்தை எதிர்த்து நாம் தொடர்ந்தும் போராடுவோம் போன்ற பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.



ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நீதிமன்ற உத்தரவை மீறி போராட்டம் நடத்தியதற்காக ஒகஸ்ட் 3ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் ஒகஸ்ட் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3)

# மருமகன் தாக்கியதில் மாமியார் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக. 06

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மருமகனின் தாக்குதலுக்கு இலக் கான மாமியார் மற்றும் மைத்துனர் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணித் தகராறு காரணமாக 46 வயதான மாமியார் மற்றும் 14 வயதான மைத்துனர் ஆகியோரை குறித்த சந்தேக நபர் கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில் மாமியார் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)



# சைக்கிளில் கதிர்காமத்துக்கு புறப்பட்ட யாழ். இளைஞர்கள்!

யாழ்ப்பாணம், ஒக. 06

யாழ்ப்பாணம், தொல்புரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றலில் இருந்து கதிர்காமத்தை நோக்கி சைக்கிள் பயணத்தை ஆரம்பித்தனர்.

இந்த பயணம் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் கோவிலடியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

தொல்புரத்தைச் சேர்ந்த குகநாதன் நிதுசன் (வயது 24) பாஸ்கரன் சுமித்தன் (22) ஆகிய இரண்டு இளைஞர்களுமே இவ்வாறு சைக்கிள் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் உடல் ஆரோக்கியம் போன்ற விடயங்களை எடுத்துக்காட்டும் முகமாகவே இந்த சைக்கிள் பயணம் அமையவுள்ளதாக குறித்த இளைஞர்கள் தெரிவித்தனர். (அ)

# இந்த ஆண்டில் முதல் ஏழு மாதங்களில் 6 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகம்!

கொழும்பு, ஒக. 06

இலங்கையில் முதல் ஏழு மாதங்களில் சுமார் 6 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் இலங்கையில் 147,192 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்பட்டன.

அந்த வகையில் இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் கடவுச்சீட்டு வழங்கல் 33 வீதத்தால் அதிகரித்து 590,260 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜூலை மாதத்தில் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவை கடவுச்சீட்டுக்காக மொத்தம் 101,777 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அதில் 98,124 பேருக்கு மாத்திரமே கடவுச்சீட்டுக்களை வழங்க முடிந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார தெரிவித்துள்ளார்.

திணைக்கள வரலாற்றின் படி, அதிக எண்ணிக்கையிலான கடவுச்சீட்டுகள் 2016 இல் விநியோகிக்கப்பட்டுள் ளன.

அந்த ஆண்டில் 6,58,725 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த ஆண்டின் ஏழு மாதங்களில் 590,260 என்பது கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமையால், 2016ஆம் வருடத்தின் சாதனை முறியடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பாராளுமன்றத்தை அரசாக மாற்றி நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 06

**பாராளுமன்றத்தை அரசாங்கமாக மாற்றி, நாட்டைக் கட்டி யெழுப்பும் தீர்மானங்களை எடுப்பதே சர்வ கட்சி அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது குறித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

22ஆவது அரசியலமைப்பு திருத்த வரைவு தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் கலந்துரையாடி பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்தது எனவும் அதற்கு அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக்களை உடனடியாக ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அவற்றின் தலைவர்களுக்கு அலுவலக வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டுக்கு அரச சேவையில் இருந்து அதி வினைத்திறன் வாய்ந்த சேவை தேவை என்றும் கூறினார்.

துறைசார் கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களை அமைச்சரவைக்கு அழைக்க தாம் தயார் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

10 வருடங்களுக்கு ஏற்ற பொருளாதாரத் திட்டத்தை வகுக்க அனைவரும் ஒன்றிணைந்து அதற்கான அடித்தளத்தை அமைக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொருளாதார வீழ்ச்சியும், பசியும் போராட்டக்காரர்களின் ஆரம்பத்துக்கு வழிவகுத்தது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, போராட்டக்காரர்கள் கடைசி நேரத்தில் வன்முறையுடன் போராட்டத்தை முடித்துக் கொண்டதாக குறிப்பிட்டார்.

அன்று பாராளுமன்றத்தை ஆர்ப்பாட்டக்காரர்களிடம் இருந்து பாதுகாக்காவிட்டால் இன்று ஜனநாயகம் பற்றி இவ்வாறு ஒன்றிணைந்து கலந்துரையாட வாய்ப்பே இருக்காது என்றும் அவர் கூறினார். (அ)

# குடிதண்ணீர் விநியோக குழாயில் வெடிப்பு ஏற்பட்டுவிரயமாகும் நீர்!

## மன்னார் மக்கள் கடும் விசனம்

மன்னார், ஓக. 06

மன்னார் தாழ்வுபாடு, எமில் வீதியில் வீதியோரமாக காணப்பட்ட மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிதண்ணீர் விநியோக குழாயில் வெடிப்பு ஏற்பட்டு கடந்த மூன்று தினங்களுக்கு மேலாக நீர் விரயமாகிக் கொண்டிருக்கும் நிலையில் இது வரை மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர் இணைப்பு காணப்படுகிறது. அந்த இணைப்பில் வெடிப்பு ஏற்பட்டு நீர் வெளியேறி வருகின் றது.

தற்போது வெடிப்பு ஏற்பட்டு நீர் வெளியேறும் பகுதியில் பாரிய பள்ளம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

சிறுவர்களின் நடமாட்டம் காணப்படும் வீதி என்பதால் அனர்த்தங்கள் ஏற்படும் நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் மூன்று தினங்களாகியும் மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது அதிக அளவில் நீர் வெளியேறி அருகில் உள்ள வீடுகளுக்குள் நீர் சென்றுள்ளதோடு, அப்பகுதியில் உள்ள வீதிகளில் நீர் தேங்கியுள்ளது.

எனவே உடனடியாக மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# புங்குடுதீவில் நாயை கொடூரமாக கொலை செய்த இருவர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் நாய் ஒன்றை கைக்கோடரியினால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்து சமூக ஊடகங்களில் காணொளியை வெளியிட்ட கும்பலில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் முதன்மை சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தார்.

நாய் ஒன்றை கைக்கோடரியினால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியது.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் இந்தச் சம்பவம் இரண்டு நாள்களுக்கு முன் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயின் உத்தரவில் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவர் நேற்றுமுன் தினம் இரவு ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

நாயை வெட்டிக் கொல்லப் பயன்படுத்தி கைக்கோடாரி மற்றும் அதனை காணொளி எடுத்த அலைபேசி என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

மிருக வதைச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் கூறினார்.

நாயை வெட்டிக் கொன்றவர்களில் முதன்மை சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்பட்டு வருகிறார்.

# தொடரும் நெருக்கடி நிலை: இலங்கைக்கான சுற்றுலாக்களை ரத்து செய்த முன்னணி நிறுவனம்!

கொழும்பு, ஓக.06

இலங்கையில் அமைதியின்மை காரணமாக இலங்கைக்கான விடுமுறைகளை மேலும் ரத்து செய்வதாக ஜேர்மனை தளமாகக்கொண்ட சுற்றுலாத்துறை முன்னணி நிறுவனமான ரி.யு.ஐ.(TUI) அறிவித்துள்ளது.

இந்த செய்தியை இங்கிலாந்தின் ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. உணவு,மருந்து, எரிபொருள் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட பற்றாக்குறையுடன் பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்டுள்ள நிலையில் நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்தன.

இதன்போது போராட்டக்காரர்கள் அரச கட்டடங்களை முற்றுகையிட்டனர். இதனையடுத்து கடந்த மாதம் இலங்கை அரசாங்கத்தால் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக ரி.யு.ஐ கடந்த மே மாதம் முதல் இலங்கை விடுமுறைகளை ரத்து செய்து வருகிறது.

இதன்படி தற்போது ஓகஸ்ட் 22 வரையான பயணங்களை அந்த நிறுவனம் ரத்துச்செய்துள்ளது. இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை காரணமாக அத்தியாவசிய பயணங்களைத் தவிர மற்ற பயணங்களை தவிர்க்குமாறு வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

இதன் விளைவாகவே துரதிர்ஷ்டவசமாக ஒகஸ்ட் 22 இலங்கைக்கு புறப்படும் அனைத்து பயணங்களையும் ரத்து செய்ய வேண்டியேற்பட்டுள்ளது என்று டியுஐ குறிப்பிட்டுள்ளது.

எனினும் இலங்கையின் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணிக்கும் வாடிக்கையாளர்களுக்கு இந்த அறிவுரை பொருந்தாது என்று ரி.யு.ஐ. அறிவித்துள்ளது. (அ)

# ஜோசப் ஸ்டாலினை அரசு உடன் விடுவிக்கவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 06

"பழிவாங்கும் நோக்குடன் கைதுசெய்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்."

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஜோசப் ஸ்டாலின் விடுவிக்கப்படும் வரைக்கும் நாடெங்கும் நாள்தோறும் எதிர்ப்புப் போராட்டங்கள் ஆசிரியர் சமூகத்தினரால் முன்னெடுக்கப்படும் என்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு-கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் மாலை பிறப்பித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவையும் மீறி அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டார்.

இந்தநிலையில் அவரின் கைதைக் கண்டித்து உள்ளூர் மற்றும் வெளிநாடுகளின் மனித உரிமை அமைப்புக்கள் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன. (அ)

# மின் துண்டிக்கப்பட்டபோது ஒருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பு, ஓக. 06

லுணுகம்வெஹர, பதவ்கம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தனது பிள்ளைகளுடன் இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகம்வெஹெர பிரதேச செயலக உத்தியோகத்தரான யு.எஸ். டி. திலின பிரசாத் என்பவரே கொல்லப்பட்டார்.

லுணுகம்வெஹர பிரதேசத்தில் பல திருட்டு மற்றும் கொலைகளுடன் தொடர்புடைய நபர் ஒருவரே இந்த கொலையை மேற்கொண்டுள்ளதாகவும் அவருடன் கொலையாளியின் தந்தை மற்றும் சகோதரனும் வந்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் லுணுகம்வெஹர பொலிஸார் கூறினர்.

லுணுகம்வெஹெர கும்புருயவில் உயிரிழந்தவரின் எருமைகளை சந்தேகநபர் திருட முயன்றதாகவும், அதை உரிமையாளர் தடுத்தபோது முரண்பாடு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அப்போது, உயிரிழந்தவரையும் அவரது மனைவியையும் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப் போவதாக மிரட்டல் விடுத்ததாக உயிரிழந்தவரின் மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

லுணுகம்வெஹர பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் வந்து எருமைகளை விடுவித்ததாகவும் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தவேளை உயிரிழந்தவர் தனது இரண்டு பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் உணவருந்திக் கொண்டிருந்தபோதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் சிசிரிவி பொருத்தப்பட்டிருந்த போதிலும், மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது கமராக்கள் அணைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு வந்த மூவரில் பிரதான சந்தேக நபரின் தந்தை லுணுகம்வெஹர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# இந்து சமுத்திரப் பிராந்தியத்தை அதிகாரப் போட்டி களமாக்காதீர்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 06

**இந்து சமுத்திரப் பிராந்தியம் எப்பொழுதும் அமைதிப்பூங்காவாகத் திகழவேண்டும் என்பதில் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே அந்த அமைதி முயற்சியைக் குலைக்கும் விதத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அமைந்துவிடக்கூடாது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் எச்சரிக்கை செய்துள்ளார்.**

சீன உளவுக் கப்பலின் வருகை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளதாவது:

சீனாவின் உளவுக் கப்பல் ஒன்று இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு எதிர்வரும் 11ஆம் திகதி வரவிருப்பதாகவும் ஏறத்தாழ ஒரு வாரம் இங்கு தங்கியிருந்து ஆய்வுகள் செய்ய இருப்பதாகவும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பலைச் சுற்றி 750 சதுர கி.மீ. பரப்பளவிற்கு சகலவற்றையும் கண்காணிக்கும் தொழில்நுட்பத் திறன்களையும் கொண்டது.

இலங்கை என்பது இந்தியாவிற்கு மிக அண்மித்த நாடாக இருக்கின்றது. குறிப்பாக இந்தியாவின் பாதுகாப்பு எல்லைப் பரப்பிற்குள் இலங்கையும் உள்ளடங்குகின்றது. இந்தியாவின் தென் மாநிலங்களில் அணுசக்தி நிறுவனங்களும், செய்மதி ஏவுதளங்களும் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களும் உள்ளன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், சீன உளவுக் கப்பலின் வருகை என்பது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்பதற்கு அப்பால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இது ஒருபுறமிருக்க இந்து சமுத்திரப் பிராந்தியமானது வல்லரசுகளின் போட்டியிலிருந்து விடுபட்டு, ஓர் அமைதிப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்பதில் நேருவும் சாஸ்திரியும் இந்திராகாந்தியும் சிரத்தையுடன் இருந்தார்கள்.



அதன் காரணமாகவே அவர்கள் அமெரிக்க சோவியத் வல்லரசுகளுடன் இணையாமல் அணிசேரா நாடுகளின் கூட்டு ஒன்றை உருவாக்கினார்கள். சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு, அணிசேரா நாடுகளின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவராக இருந்து அணிசேரா நாடுகளின் அணியை உருவாக்கினார்.

தற்பொழுது, இந்துசமுத்திரப் பிராந்தியமானது அவ்வாறான அமைதிப்பிரதேசம் என்ற நிலையிலிருந்து அமெரிக்க-சீன வல்லரசுகளின் வல்லாதிக்கப் போட்டியின் களமாக மாறுகின்றதா என்ற அச்சம் எழுகின்றது.

2016ஆம் ஆண்டு சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக்கு வருகை தந்தபொழுது இந்தியா தனது கவலையைத் தெரிவித்திருந்தது. அன்று இலங்கை அரசாங்கம் இந்தியாவின் கவலைக்கு உரிய விதத்தில் பதிலளிக்கவில்லை. இப்போதும் சீனா தனது உளவு கப்பலை இலங்கைக்குள் நங்கூரமிடத் திட்டமிட்டுள்ளது.

இதற்கும் இந்தியா தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கம் அந்தக் கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காகவே வருகை தருவதாகக் கூறுகிறது. இலங்கையின் இத்தகைய அணுகுமுறைகளைப் பார்க்கின்றபோது இந்து சமுத்திரத்தின் அமைதியின்மைக்கு இலங்கையும் துணை போகின்றதோ என்ற கேள்வி பலமாக எழுகின்றது.

இலங்கையில் ஏற்படும் இன முரண்பாடுகள் மற்றும் இலங்கை ஏனைய வல்லாதிக்க சக்திகளின் பிடிக்கு உட்படுவது என்பது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதில் இந்தியா எப்பொழுதும் கரிசனை கொண்டு செயற்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே, இலங்கையில் இன முரண் பாடுகள் தீர்க்கப்பட வேண்டு மென்பதிலும் இலங்கை ஏனைய வல்லாதிக்க சக்திகளின் ஆளுமைக்குள் செல்லக்கூடாது என்பதிலும் இந்தியா கரிசணையுடன் செயற்பட்டு வந்திருக்கின்றது.

எனவே இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் காத்திரமான மாற்றங்கள் தேவை என்பதையும் இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதிப்பிராந்தியமாகத் திகழ வேண்டும் என்பதற்கு முதன்மை ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதிலும் இலங்கை கவனத்துடன் செயற்பட வேண்டும்-என்றுள்ளது. (அ)

# எரிபொருள் விநியோகம் சீரின்மை; பஸ் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஓக. 06

எரிபொருள் விநியேகத்தில் தொடரும் நெருக்களுக்கு தீர்வு கோரி நேற்று நள்ளிரவு முதல் சில பஸ் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளன.

கியூ.ஆர். முறைமைக்கமைய போதுமான அளவு டீசல் கிடைக்கவில்லை என தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை சில பஸ் சங்கங்கள் முன்னெடுத்துள்ளன.

அகில இலங்கை தனியார் பஸ் நிறுவனங்களின் சம்மேளனம், அனைத்து மாகாணங்களுக்கிடையிலான பஸ் சங்கம், பொதுஜன ஐக்கிய பஸ் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை ஐக்கிய பஸ் உரிமையாளர்கள் சங்கம் இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளன. (அ)

# சீரற்ற காலநிலையால் ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஓக. 06

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இலங்கை ரயில் திணைக்களம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது. உடரட ரயில் வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக கொழும்பு கோட்டை மற்றும் பதுளைக்கு இடையிலான கடுகதி ரயில் சேவைகள் சில இரத்துச் செய் யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (அ)

# யானை தாக்கி முதியவர் வவுனியாவில் உயிரிழப்பு!

வவுனியா, ஓக. 06

வவுனியா, சேமமடு கிராமத்தில் யானை தாக்கி முதியவர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சேமமடு பகுதியில் வசிக்கும் 68 வயதுடைய முதியவர் ஒருவர் காட்டில் தேன் எடுப்பதற்காகச் சென்றுள்ளார்.

காடு நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வீதியின் குறுக்கே நின்ற யானை அவரை தாக்கியுள்ளது.

சம்பவ இடத்திலேயே முதியவர் மரணமடைந்துள்ளார். வீதியால் சென்றவர்கள் அதனை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஜனநாயகத்தை அவமதிக்கும் செயலே ஸ்டாலினின் கைது!

## நவ சமசமாஜக் கட்சி விசனம்

கொழும்பு, ஓக. 06

புதிய ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சிம்மாசன உரையை ஆற்றி ஜனநாயகத்தை கொண்டு வருவோம் என உறுதியளித்த அதே நாளில் உயர் தொழிற் சங்க தலைவர் கைது செய்யப்பட்டமை ஜனநாயகத்திற்கு கடுமையான அவமானம் என நவ சமசமாஜக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

சில தொழில்நுட்ப உத்தரவுகளை மீறுவது பொதுப் போராட்டங்களின் போது பொதுவான நிகழ்வுகளாகும் எனவும், எப்போதும் மக்கள் கைது செய்யப்படுவதில்லை எனவும் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட இந்த கைது வழக்கத்திற்கு மாறானது எனவும் அது வலியுறுத்தியுள்ளது. (அ)

# அனைத்து அரசியல் கட்சிகளும் சர்வகட்சியில் இணையவேண்டும்

## அமரபுர நிக்காயவின் தேரர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 06

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு பலமான அரசாங்கம் அவசியமானது என இலங்கை அமரபுர மகா நிக்காயவின் அதியுயர் தலைவர் அக்கமஹா பண்டித வண. தொடம்பஹல சந்தசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை தேரரை சந்தித்தபோதே அவர் இதனை கூறினார்.

விகாரைக்கு சென்ற ஜனாதிபதியை நிர்வாக சபையின் தலைவர் அஜித டி சொய்சா உட்பட சபை உறுப்பினர்கள் வரவேற்றனர்.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மதவழிபாடுகளில் ஈடுபட்டார். மகாநாயக்க தேரர் தலைமையிலான மகாசங்கத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர், தாது மன்றத்திற்குச் சென்று அங்கு சமய கிரியைகளை மேற்கொண்ட பின் மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

இதன்போது, விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து நாட்டை தன்னிறைவு அடையச்செய்ய தேவையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறிய தேரர், திறமையின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்ட தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்குதல் மற்றும் எதிர்கால உலகை வெல்லக்கூடிய பொருத்தமான பாடங்களை பாடசாலை பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் இலங்கை அமரபுர மகா நிக்காயவின் பதிவாளர் கலாநிதி வண.பல்லேகந்த ரத்தனசார தேரர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# இ.போ.ச. எரிபொருள் விநியோகத்தை நெறிப்படுத்துவது மிகஅவசியமானது!

## உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 06

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊடாக எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை மேலும் நெறிப்படுத்துவது அவசியமானது என உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு, மக்களுக்கு தேவையான எரிபொருள், மின்சாரம், உணவு, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு முறையான சேலைத்திட்டமொன்றை வகுக்குமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிடுமாறு கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சமர்ப்பித்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை ஆராய்ந்தபோதே உயர் நீதிமன்ற நீதிபதி விஜித் மலல்கொட இதனைக் குறிப்பிட்டார். விஜித் மலல்கொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இந்த மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கான மேலதிக யோசனைகள் அடங்கிய பிரமாணப் பத்திரத்தை நாளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு உயர் நீதிமன்ற நீதிபதிகள் இதன்போது உத்தரவிட்டனர். (அ)

ஈழநாடு



# மியான்மரின் அபயக்குரல்!

## உலகின் மனச்சாட்சியை உலுக்கியது! மியான்மாரில் தூக்கிடப்பட்ட நால்வர்:

**சர்வதேச அமைப்புகளும், வல்லரசு நாடுகளும் பலவீனப்பட்டிருப்பது தான் மியான்மர் ராணுவத்தின் ஈவிரக்கமில்லாத செயல்பாடுகளுக்குக் காரணம்.**





ஜனநாயகப் போராளிகள் நான்கு பேர் மியான்மர் ராணுவ ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்டிருப்பது உலகின் மனசாட்சியையே உலுக்கியுள்ளது. சர்வதேச அமைப்புகளும், வல்லரசு நாடுகளும் பலவீனப்பட்டிருப்பதுதான் மியான்மர் ராணுவத்தின் ஈவிரக்கமில்லாத செயல்பாடுகளுக்குக் காரணம்.

ஆங் சான் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோசேயா சாவ், ராணுவ ஆட்சியின் கடுமையான விமர்சகர் கோ ஜிம்மி இருவரும் தூக்கிலிடப்பட்டிருக்கும் நால்வரில் இருவர். அவர்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையில் மேல் முறையீட்டுக்கோ, வழக்குரைஞர்கள் உதவிக்கோ வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று ஐ.நா.வின் மனித உரிமை ஆணையம் தெரிவித்திருக்கிறது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மியான்மரில் ராணுவ ஆட்சி நிறுவப்பட்டது முதல் இதுவரை குறைந்தது 140 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களில் தண்டனை நிறைவேற்றப்பட்ட முதல் நால்வர் இவர்கள்தான். வரும் வாரங்களிலும், மாதங்களிலும் இதுபோல மேலும் பல தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்படலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

ராணுவ ஆட்சி அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை 14,000-க்கும் அதிகமான ஜனநாயகப் போராளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 11,000-க்கும் அதிகமானோர் மியான்மரின் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனநாயகப் போராளிகளின் தலைவியான ஆங் சான் சூகி மீது பொய் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ரகசிய விசாரணை நடத்தப்பட்டு 11 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவர் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ராணுவ நீதிமன்றங்கள் வழங்க இருக்கும் தீர்ப்புகள், அவரை வாழ்நாள் முழுவதும் சிறைக்குள் அடைத்தாலும் வியப்படையத் தேவையில்லை.

ஆயிரக்கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. லட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்திருக்கிறார்கள். 2,000-க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும், மியான்மர் ராணுவ ஆட்சியாளர்களால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்து சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டவோ, தங்களது அதிகாரத்தை முழுமையாக உறுதிப்படுத்தவோ முடியவில்லை என்பதுதான் நிஜநிலைமை.

1962-இல் மியான்மரில் கொண்டுவரப்பட்ட ராணுவ ஆட்சி 2010 வரை தொடர்ந்தது. அதன் பிறகு 10 ஆண்டுகள் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சியுடன் உடன்பாடு ஏற்பட்டு, மியான்மரில் ஓரளவு ஜனநாயகம் ஏற்பட்டது. ஆங் சான் சூகியின் வழிகாட்டுதலில் நடைபெற்ற ஜனநாயக ஆட்சியில் மியான்மரில் ஓரளவுக்கு ஸ்திரத்தன்மையும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டன.

தங்களால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை என்பதால்தான், ராணுவத் தளபதிகள் சிறிதளவு ஜனநாயகத்தை அனுமதித்தனர். அதன் விளைவாக, சூகியின் செல்வாக்கு அதிகரித்து வருவதும், நிலைமை தொடர்ந்தால் தங்களது அதிகாரத்துக்கு ஆபத்து ஏற்படும் என்பதும் அவர்களை அச்சுறுத்தின.

**கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மியான்மரில் ராணுவ ஆட்சி நிறுவப்பட்டது முதல் இதுவரை குறைந்தது 140 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களில் தண்டனை நிறைவேற்றப்பட்ட முதல் நால்வர் இவர்கள்தான். வரும் வாரங்களிலும், மாதங்களிலும் இதுபோல மேலும் பல தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்படலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.**

ஜனநாயக சோதனையை முடிவுக்குக் கொண்டுவந்து ராணுவத்தின் துப்பாக்கி முனையில் ஆட்சியை நடத்தி அரசியல் எதிரிகளை அழிப்பது என்பதுதான் தளபதிகளின் தற்போதைய நோக்கம்.

முந்தைய ஜனநாயகத்துக்கான போராட்டங்களின்போது, ஆங் சான் சூகியும் அவரது ஆதரவாளர்களும் வன்முறை தவிர்த்த போராட்டங்களை மட்டுமே முன்னெடுத்தனர். இப்போது போராளிகள் வன்முறையைக் கையாள்வது மட்டுமல்லாமல், பல ஆண்டுகளாக ராணுவத்துடன் மோதிக் கொண்டிருக்கும் பல்வேறு இனக்குழுக்களுடன் இணைந்திருக்கிறார்கள். மியான்மர் ராணுவ ஆட்சியாளர்களை அச்சுறுத்தும் இந்த மாற்றம்தாம் அவர்களைத் தூக்கிலிடும் அளவுக்கு சென்றிருக்கிறது.

ஆட்சி, தளபதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், பொருளாதாரம் அவர்களது கட்டுப்பாட்டில் இல்லை. நகரங்களில் மக்கள் போராட்டமும், கிராமங்களில் ஆயுதப் போராட்டங்களும் அதிகரித்து வரும் நிலையில், மியான்மரில் பாதிக்கும் மேற்பட்ட இடங்கள் போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

நமது அண்டை நாடான மியான்மரில் ஏற்படும் எந்தவொரு பிரச்னையும் இந்தியாவை நேரடியாக பாதிக்கும். நமது வடகிழக்கு மாநிலங்களும், மியான்மரும் 1,642 கி.மீ. எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தோ - பர்மா எல்லை என்றுதான் நூற்றாண்டுகளாக அது குறிப்பிடப்படுகிறது. மணிப்பூருக்கும் மியான்மருக்கும் இடையில் மக்கள் சர்வ சாதாரணமாக சென்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ராணுவம் முழுமையாக தனது கட்டுப்பாட்டில் ஆட்சியைக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து மிஸோரம், மணிப்பூர் மாநிலங்களில் 50,000-க்கும் அதிகமாக மியான்மார் அகதிகள் வந்திருக்கிறார்கள். மிஸோரத்தில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான அகதிகள் முகாம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தில்லியில் 6,000-க்கும் அதிகமான பர்மா அகதிகள் இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.




மேலை நாட்டு வல்லரசுகள், உக்ரைன் - ரஷ்ய போரை எதிர்கொள்வதில் கவனம் செலுத் துகின்றனவே தவிர, மியான் மரில் காணப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து அக்கறை செலுத்துவதில்லை. இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளும் மியான்மர் ராணுவத் தளபதிகளுக்கு எதிராகப் பேசத் தயங்குகின்றன. நாம் எடுக்கும் முடிவுகள் மியான்மரை சீனாவின் அரவணைப்புக்குத் தள்ளிவிடுமோ என்கிற பயம்தான் அதற்குக் காரணம். **(தினமணி)**

ஈழநாடு



# இந்திய – இலங்கை ஒப்பந்தம் 35 வருடங்கள்

## - எங்கிருந்து எங்கு செல்வது? -



**யதீந்திரா**

நமது அரசியல் சூழலிலுள்ள சில பலவீனங்கள் தொடர்பில் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அதாவது, எதிர்பார்ப்புக்களை முன்னிறுத்துபவர்கள் எவரிடடும், அதனை அடையும் வழிமுறைகள் இல்லை. ஏனெனில் அது அவர்களுக்கு தெரியாதென்று குறித்த கட்டுரை சுட்டிக்காட்டியிருந்தது. இது தொடர்பில் சில நண்பர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

அந்த பதில் உங்களிடம் இருக்கின்றதா - என்று ஒரு புலம்பெயர் நண்பர் கேட்டிருந்தார். கேள்வி சரியானது. மற்றவர்களை நோக்கி தொடுக்கும் விமர்சனங்கள் என்பவை பூமறாங் போன்றது. பூமறாங் என்பது - அதனை வீசியவரையே நோக்கி தாக்கும் திறன் கொண்டது. எறிந்தவருக்கு அதனை மீளவும் சரியாக பிடிக்கத் தெரியாது போனால், இறுதியில் எறிந்தவரையே அது தாக்கிவிடும்.

ஆனால் இவ்வாறான கேள்விகளுக்கு எனது முன்னைய பத்திகளிலும் பதிலளித்திருக்கின்றேன். மீண்டும் அந்த பதிலை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் சில விடயங்களை இந்த பத்தியில் காண்போம். இந்த கட்டுரை எழுதப்படும் காலத்திற்கும் தமிழர் அரசியலுக்கும் ஒரு வரலாற்று தொடர்புண்டு. 1987,யூலை (29) மாதத்தில்தான், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஆண்டுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 35 வருடங்கள் ஆகின்றன.

கடந்த 35 வருடங்களில், தமிழர் அரசியலில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. எனினும் தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் முன்நோக்கி சென்றிருப்பதற்கான சான்றுகள் இல்லை. பின்னடைவுகளே இடம்பெற்றிருக்கின்றன. பத்து லட்சத்திற்கு மேற்பட்ட ஈழத்-தமிழ் மக்கள், பல ஐரோப்பிய நாடுகளில் சிதறி வாழ்கின்றனர், அவர்கள் தாயக அரசியல் தொடர்பில் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதற்கு அப்பால், குறிப்பிட்டுச் சொல்ல எதுவும் இல்லை.

யுத்தத்திற்கு பின்னரான, கடந்த 13 வருடங்களில் பல்வேறு விட யங்கள் விவாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவைகள் எவற்றிலும் தமிழர்கள் வெற்றிபெறவில்லை. ஆகக் குறைந்தது நம்பிக்கைக்குரிய முன்னேற்றங்கள் கூட ஏற்படவில்லை. சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் அதிகம் பேசிக் கொண்டாலும் கூட, கொழும்பின் ஆட்சியாளர்களின் அணுமுறைகளுக்கு ஏற்ப, அழுத்தங்கள் மாறிக் கொண்டிருந்தன.

ராஜபக்சக்கள் இருக்கின்ற போது ஒரு மாதிரியும், ரணில் போன்றவர்கள் ஆட்சிக்கு வருகின்றபோது, வேறு மாதிரியுமே, மேற்குலக நாடுகள் நடந்து கொண்டன. அவர்கள் அப்படி நடந்து கொள்வதிலும் ஆச்சரியங்கள் ஏதுமில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில், இசையமைப்பிற்கு சொற்களை தேடுபவர்கள் போன்றே தமிழர்களின் வாழ்வு கழிந்திருக்கின்றது.

ஆனால், தமிழர் அரசியலில் தீர்மானகரமான சக்தியாக இருக்கும், பிராந்திய சக்தியான, இந்திய பேரசானது - முன்னரும், இப்போதும் ஒரு விடயத்தை மட்டுமே வலியுறுத்திவருகின்றது. அதாவது, 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, 13வது திருத்தச்சட்டம் தொடர்பிலேயே, இந்தியா தொடர்ந்தும் அழுத்தி வந்திருக்கின்றது.

இதனை ஆழமாக நோக்கினால், ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு, 13வது திருத்தச்சட்டம்தான். அதிலிருந்து முன்னோக்கி செல்வதென்பது வேறு விடயம். ஆனால் எந்தவொரு பயணமும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும் என்பதே, புது டில்லியின் நிலைப்பாடாக இருந்திருக்கின்றது.

கடந்த 35 வருடங்களில், பல சிங்கள-அரசாங்கங்கள் வந்து போயிருக்கின்றன. அவர்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதித்திருக்கின்றனர். எனினும் 13வது திருத்தச்சட்டத்தை எவராலும் தாண்டிச் செல்ல முடியவில்லை. தாண்டிச் செல்லும் முயற்சிகள் ஒன்றில் தோல்வியடைந்திருக்கின்றன அல்லது தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 13 வருடகால அரசியல் முன்னெடுப்புக்கள் இதற்கு தெளிவான சான்றாகும்.

ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், புதியதொரு அரசியல் யாப்பு தொடர்பில் ஆடம்பரமாக விவாதிக்கப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ரணில்-மைத்திரி அரசாங்கமும் தேனிலவில் இருந்தது. ஆனால் என்ன நடந்தது? புதிய அரசியல் யாப்பு விடயத்தில் வெற்றிபெற முடிந்ததா? ரணில்-மைத்திரி காலத்தில், 13வது திருத்தச்சட்டத்தை தாண்டி அதிக தூரம் சென்றுவிட்டதாகவே இரா. சம்பந்தன், கூறிக்கொண்டிருந்தார். ஆனால் இறுதியில் என்ன நடந்தது?

ஆனால் இங்கு பிறிதொரு விடயத்தை ஆழமாக கவனிக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் தோல்வியடைக்கின்ற போது, சிங்கள ஆட்சியாளர்கள் சிறிதும் சலனத்தை வெளிப்படுத்துவதில்லை. ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்து முயற்சிகள் தோல்விடைந்தமை தொடர்பில், ரணிலோ அல்லது மைத்திரியோ கவலைப்பட வில்லை. ஏனெனில் அவர்களை பொறுத்தவரையில் புதிய அரசியல் யாப்பு ஒரு முதன்மையான தேவையாக இருந்திருக்கவில்லை.

அந்த நேரத்தில், கூட்டமைப்பின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஒரு விடயத்தை என்னிடம் கூறினார். ரணில்-மைத்திரி அரசாங்கத்தில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்குமே, புதிய அரசியல் யாப்பு விடயத்தில் அக்கறையிருக்கவில்லை. அவர்களை பொறுத்தவரையில் இது ஒரு ‘வெடநத்தி வெட’ (வேலை இல்லாதவர்களின் வேலை). ஒப்பீட்டடிப்படையில் ரணில், மங்கள சமரவீர போன்ற ஒரு சிலருக்குத்தான், இந்த விடயங்களில் ஆர்வம் இருந்தது எனலாம். இந்த பின்னணியில்தான், புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இந்த அனுபவங்களிலிருந்து சிந்தித்தால், என்ன செய்யலாம் என்னும் கேள்விக்கான பதிலை காண்பது சிக்கலான காரியமல்ல. தமிழர்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் இருக்கின்றன. ஒன்று, இருப்பதை கையாளுவதன் மூலம் முன்நோக்கி பயணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது. அதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஒரு அஸ்திபாரமாகக் கொண்டு பயணிப்பது. இதில் உண்மையாகவும் உறுதியாகவும் தமிழ் தரப்புக்கள் இருக்க வேண்டும்.

ஒரு கட்சி 13 பற்றி பேசியவுடன், இன்னொரு கட்சி, 13 எதிர்ப்பு ஊர்வலம் செய்து கொண்டிருந்தால் இதிலும் முன்நோக்கி பயணிக்க முடியாது. இரண்டாவது, முழுமையான புரட்சிகர மாற்றத்திற்காக போராடுவது. போராட்டம் என்பது, நல்லூர் கோவிலடியில் கூடும் போராட்டம் அல்லது பொலிகண்டியில் எந்த இடத்தில் கல்வைப்பதென்று சண்டைபோடும் போராட்டம் அல்ல. ஆனால் நம் அனைவருக்கும் தெரியும்.

ஒரு கட்சி 13 பற்றி பேசியவுடன், இன்னொரு கட்சி, 13 எதிர்ப்பு ஊர்வலம் செய்து கொண்டிருந்தால் இதிலும் முன்நோக்கி பயணிக்க முடியாது. இரண்டாவது, முழுமையான புரட்சிகர மாற்றத்திற்காக போராடுவது. போராட்டம் என்பது, நல்லூர் கோவிலடியில் கூடும் போராட்டம் அல்லது பொலிகண்டியில் எந்த இடத்தில் கல்வைப்பதென்று சண்டை போடும் போராட்டம் அல்ல. ஆனால் நம் அனைவருக்கும் தெரியும்.

நிச்சயமாக விடுதலை போராட்டமொன்றை முன்னெடுக்கக் கூடிய நிலையில் இன்றுள்ள தலைமைகள் எவரும் இல்லை. அப்படியொரு தலைமையிருந்தால், அவரை அறிந்துகொள்வதில் இந்தக் கட்டுரையாளர் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கின்றார்.

அப்படியாயின் என்ன வழிதான் உண்டு? இப்போது, எஞ்சியிருப்பது என்ன? அது ஒன்றுதான் - அதவாது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பயன்படுத்திக் கொண்டு, மெதுவாக முன்னோக்கி நகர்வது மட்டுமே ஒரேயொரு தெரிவாக இருக்க முடியும். அப்படிப் பார்த்தால், மாகாண சபை முறைமையை திறம்பட முன்னெடுப்பதற்கான முயற்சிகளைத்தான் தமிழர் தரப்புக்கள் மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் மட்டும்தான், புதுடில்லியின் ஆதரவை ஈழத் தமிழர்கள் கோர முடியும். இதை தவிர்த்து எந்த விடயங்களை பற்றிப் பேசினாலும் அவற்றால் தாயகத்திலுள்ள மக்களுக்கு எந்தவொரு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

ஈழத் தமிழர்களிடம் புவிசார் பலமிருக்கின்றது, பிராந்திய பலமிருக்கின்றது என்பதெல்லாம் அரசியல் அறியாமை. நாங்கள் தேவையானதொரு மக்கள் கூட்டமென்று உலகம் கருதியிருந்தால், முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்திருக்காது. ஏழு கோடிக்கு மேற்பட்ட தமிழ் நாட்டு தமிழர்கள், பத்துலட்சம் ஈழத்து புலம்பெயர் சமூகம், இவர்களை சாட்சியாகக் கொண்டுதானே அனைத்தும் நடந்துமுடிந்தது. அப்போது புவிசார் பலத்திற்கும், பிராந்திய பலத்திற்கும் என்ன நடந்தது? பதில் இலகுவானது. இவ்வாறான விடயங்கள் அனைத்தும் சிலரது கற்பனை. இவ்வாறான கற்பனைகள் நல்ல திரைப்படமொன்றிற்கு பயன்படலாம் ஆனால் பாதிக்கப்பட்டு, நிலை குலைந்து போயிருக்கும் ஈழத் தமிழினத்திற்கு ஒரு போதும் பயன்படாது.

மாகாண சபை முறைமையை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு, முன்நோக்கி நகர்வது தொடர்பில் சிந்திப்பது, செயற்படுவது மட்டும்தான், இப்போதுள்ள ஒரேயொரு தெரிவாகும். எதிர்காலத்தில் ஒரு சமஸ்டித் தீர்வை நோக்கி பயணிப்பதாக இருந்தாலும் கூட, அதற்கான அடிப்படையும் இங்குதான் இருக்கின்றது. இந்த இடத்தில் பிறிதொரு சங்கடமும் குறுக்கிடலாம்.

அதாவது, சிலர் அன்று இதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று வாதிட முயற்சிக்கலாம். ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது, ஏற்றுக்கொள்ளாத விடுதலைப் புலிகள் இப்போது இல்லை. அவர்கள் ஏன் இல்லாமல் போனார்கள் என்பது ஒரு வரலாற்று படிப்பினை. எதிர்காலத்தை சிறந்ததாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று எண்ணினால், கடந்தகாலத்தை படிப்பது மிகவும் கட்டாயமானது.

ஈழநாடு



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

கல்வி tv CHANNEL-1

**06.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**06.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்முனை பிரதேச செயலகத்தை இன ரீதியாக பிரிப்பதை முஸ்லிம் கட்சிகள் தடுக்கவேண்டும்

## உலமா கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் கோரிக்கை

மட்டக்களப்பு, ஒக. 06

ஜனாதிபதியின் சர்வ கட்சி அரசுக்கு ஆதரவளிப்பதாக கூறும் முஸ்லிம் கட்சிகள் தமக்குரிய பதவிகளை பற்றி பேசாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கும் கல்முனை பிரதேச செயலகத்தை இன ரீதியில் பிரித்து தமிழ், முஸ்லிம் முரண்பாட்டை உருவாக்கும் முயற்சியை நிறுத்தும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவிக்கையில்-

சர்வகட்சி அரசுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆச்சரியமான ஒரு நிபந்தனையை முன் வைத்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக விசாரணை செய்த பொலிஸ் அதிகாரி ஷானி விஜேசேகரவை விடுதலை செய்து ஈஸ்டர் பற்றி விசாரிக்கவேண்டும், ஒரே நாடு ஒரே சட்ட அறிக்கையை குப்பையில் போடவேண்டும்.

சர்வ கட்சிக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் சார்ந்த சமூகத்தின் பிரச்னைகளை முன் வைத்துள்ளபோது ஆக குறைந்தது ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம்களை விசாரணையின் பின் விடுதலை செய்யவேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் அமைச்சராக இருந்த அரசாங்கத்தில் ஈஸ்டர் தாக்குதலுக்கு உஷார் ஊட்டிய திகன, கண்டி சம்பவங்கள்பற்றி ஆராயவேண்டும் என்றும் நிபந்தனை விதித்திருந்தாலாவது ஹக்கீமுக்கு சமூக அக்கறை கொஞ்சமாவது உள்ளது என தெரிந்திருக்கும்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் நியமிக்கப்பட்ட செயலணியின் ஒரே நாடு ஒரே சட்ட அறிக்கை கோட்டாபய ஓடியவுடன் குப்பைத்தொட்டிக்கு போய் விட்டது. இப்போது இருப்பது புதிய ஜனாதிபதி. இந்த அறிக்கையை ரவூப் ஹக்கீம் நிபந்தனையாக்கி மீண்டும் உயிர்ப்பிக்க முனைகிறாரா என்ற கேள்வி எழுகிறது. ஆகவே சமூகம் எதிர்நோக்கும் முக்கிய விடயங்களை ஜனாதிபதியுடன் எழுத்து மூலம் முன் வைத்து நேரடியாக பேசாமல் வெறுமனே ஊடகங்கள் முன்பு வீராப்பு பேசுவதை ஹக்கீம் போன்ற கட்சித்தலைவர்கள் கைவிட வேண்டும்.

இவற்றை ஊடகங்களில் பேசி உஷார் ஊட்டாமல் எழுத்து மூலம் ஜனாதிபதியிடம் முன் வைத்து பேச வேண்டும். ஆனாலும் முஸ்லிம் கட்சிகள் தமது பதவிகள் பற்றியே அழுத்தம் திருத்தமாக பேசுவர் என்பதே உண்மை-என்றார். (அ)

# வாகனேரிப் பகுதியில் மீன்பிடிப்பதற்கு சென்றோர் குளவி கொட்டுக்கு இலக்கு!

மட்டக்களப்பு, ஒக. 06

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி பெட்டைக் குளத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் சிலர் குளவி கொட்டுக்கு இலக்காகி வாழைச்சேனை ஆதார

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குளவி தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் வாகனேரி பெட்டைக் குளத்தில் மீன் பிடித்து தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். வழக்கம் போல்

வாகனேரி பெட்டைக் குளத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது எங்கிருந்தோ இருந்து வந்த குளவிக் கூட்டம் அவர்களை தாக்கியுள்ளது.

குளவியின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக குளத்து நீரினுள் மூழ்கியும், கொண்டு சென்ற துணிகளைப் போர்வையாக பயன்படுத்தியும் பிடித்த மீன்களை கைவிட்டு தப்பி பாதுகாப்பு பெற்றதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் மூன்று சிறுவர்கள் உட்பட ஆறு பேர்கள் குளவியின் பாதிப்பிற்குள்ளாகி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# மட்டக்களப்பில் பொலிஸ் அலுவலரின் செயற்பாட்டுக்கு குவிகிறது பாராட்டு



மட்டக்களப்பு, ஒக. 06

மட்டக்களப்பு மேல்நீதிமன்ற அரச சட்டத்தரணி காரியாலயத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன்ட் கிட்னண் குலேந்திரன் பாராட்டப்பெற்றுள்ளார்.

குறித்த உத்தியோகத்தர் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் கடந்த 3ஆம் திகதி பணப்பை ஒன்றை கண்டெடுத்திருந்தார்.

அதனை சோதித்து பார்த்த போது 75520 ரூபா பணமும் ஏனைய பெறுமதியான ஆவணங்களும் காணப்பட்டன. உடனே குறித்த உத்தியோகத்தர் இவ்விடயத்தை அவரது உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்கள் முன்னிலையில் குறித்த பணத்தையும் ஆவணங்களையும் உரிய நபரிடம் வழங்கியிருந்தார்.

நேற்று முன் தினம் மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத்த பால தலைமையில் குறித்த பணப்பை உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. உயர் அதிகாரிகள் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை பாராட்டினர். (அ)

# ஜோசப் ஸ்டாலின் உட்பட போராட்டக்காரர்களை விடுதலை செய்ய உடனடி நடவடிக்கை அவசியம்!

## ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வலியுறுத்து

அம்பாறை, ஒக. 06

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட அரகல போராட்டக்காரர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது. ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைவர் கலாநிதி அன்வர் முஸ்தபா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தக் கைதானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவும் பழிவாங்கும் செயற்பாடாகவுமே அமைந்துள்ளது. இவ்வாறான அடக்குமுறைகளை ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வன்மையாக கண்டிக்கிறது. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நாட்டில் தமது உரிமைகளை, தேவைகளை கேட்டும் மற்றும் போராடியும் பல தொழிற்சங்கள் கடந்த காலங்களில் பெற்றுள்ளன. அவ்வாறான ஒரு போராட்டத்தையே முன்னிறுத்தி காலிமுகத்திடல் போராட்டகாரர்களும், இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் கடந்த ஓரிரு மாதங்களாக மேற்கொண்டிருந்தனர்.

அதிகார இரும்புக்கரங்களை கொண்டு அடக்குமுறைகளில் ஈடுபடுவதிலிருந்து விடுபடுவதன் ஊடாகவும் நாட்டு மக்களின் நம்பிக்கையுடன் கூடிய முன்னேற்றகரச் செயற்பாடுகளினூடாக நாட்டின் இன்றைய வீழ்ச்சி நிலையிலிருந்து மக்களை காப்பாற்ற முடியும்.வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியும்.

ஜனநாயக நாடான எமது இலங்கை தேசத்தில் மனிதாபிமானத்தையும், உச்சக்கட்ட ஜனநாயக மரபுகளையும் சீராக பேணுவதன் மூலமே உதவ எண்ணம் கொண்டுள்ள சர்வதேச நாடுகளினதும், சர்வதேச அமைப்புக்களினதும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதே நேரத்தில் போராட்டத்தின் பாதையை மாற்றி பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது, அரச காரியாலயங்கள், அரச நிறுவனங்களுக்குள் அத்துமீறி

நுழைவது ஜனநாயக போராட்டங்களுக்கு அழகல்ல. குறிக்கோளின் வரம்புகளை மீறி போராட்டக்காரர்கள் செயற்படுவது இலங்கை தேசத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். ஜனநாயக வழியில் நாட்டின் நலனை முன்னிறுத்தி போராடுவதே சிறந்தது-என்றுள்ளது. (அ)

# மண்டூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம்

மட்டக்களப்பு, ஒக. 06

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து இருபது நாட்கள் சிறப்புத் திருவிழாக்கள் இடம்பெறுவதுடன் 21ஆம் நாளான செப்ரெம்பர் 10 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

மண்டூர் கந்தசுவாமி ஆலயமானது மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக விளங்கினாலும் ஆகம நெறி சாரா பூசைகள் நிகழும் ஆலயங்களில் கதிர்காமத்தை ஒத்திருப்பதால் சின்னக்கதிர்காமம் என்று சிறப்பித்துக் கூறப்படும் புண்ணிய தலமாகும். (அ)

# பட்டிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் உண்டியல் திருட்டு

மட்டக்களப்பு, ஒக. 06

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் உண்டியல் களவாடப்பட்டுள்ளதாக அந்த ஆலயத்தின் தலைவர் இ. ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இத்திருட்டு சம்பவம் நேற்று முன் தினம் முற்பகல் சுமார் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் தின பூசை செய்வதற்காக வியாழக்கிழமை சென்ற குருக்கள் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த உண்டியல் காணாமல் இருந்ததை அவதானித்துள்ளார்.

ஆலயத்தின் உட்புறத்தை சுற்றிப் பார்த்த வேளை வடக்குப் புறமாக குறித்த உண்டியல் உடைக்கப்பட்டு கிடப்பதை அவதானித்து ஆலயத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.



வழக்கமாக ஆலயத்திற்கு பாதுகாவலர் வைப்பதில்லை. கதிர்காம பாதயாத்திரிகர்கள் ஆலயத்திற்கு வந்து செல்வதனால் ஆலயத்தின் முன் வாயிற் கதவு பகலில் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்நிலையில், வியாழக் கிழமை முற்பகல் வேளையில் யாரோ மிகவும் தந்திரத்தனமான முறையில் ஆலயத்தினுள் உட்புகுந்து முன்னால் வைத்திருந்த உண்டியலை எடுத்து ஆலயத்தின் வடக்குப் பக்கமாக வைத்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர் என தெரியவந்துள்ளது. (அ)

ஈழநாடு



# தாய்லாந்தில் இரவு விடுதியில் நேற்று அதிகாலை பயங்கர தீ!

## *13 பேர் பலி! 40 பேர் காயம்!!*

*பாங்கொக், ஒக. 06*

தாய்லாந்தில் உள்ள இரவு விடுதி ஒன்றில் நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந் துள்ளதுடன், 40 பேர் காயமடைந் துள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். பாங்கொக்கின் தென் கிழக்கே சோன்புரி மாகாணத்தின் சத்தாஹிப் மாவட்டத்தில் மாடிக் கட்டடத்தில் அமைந்திருந்த மவுண் டன் பி இரவு விடுதியில் அதிகாலை 1 மணியளவில் தீ விபத்து ஏற்பட் டதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பிரபலமான சுற்றுலா தலமான பட்டாயா நகருக்கு தெற்கே 30 கிலோமீட்டர் தொலைவில் சத்தா ஹிப் உள்ளது.

இரவு களியாட்ட விடுதியில் இசை நிகழ்ச்சி நடந்துகொண்டி ருந்தபோது போது தீ விபத்து ஏற்பட்டதாக மாவட்ட தலைமை பொலிஸ் அதிகாரி வுட்டிபோங் சோம்ஜாய் தெரிவித்தார்.



காயமடைந்தவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதா கவும் பலர் லேசான காயங்களுடன் தப்பிக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவரும் தாய்லாந்து நாட்டவர் கள். தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது என வும் சத்தாஹிப் மாவட்ட தலைமை பொலிஸ் அதிகாரி வுட்டிபோங் சோம்ஜாய் கூறியுள்ளார். (அ)



# ஜப்பானில் நிலநடுக்கம்

*ரோக்கியோ, ஒக. 06*

ஜப்பானின் புகுஷிமா கடற்கரையில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தரைப்பகுதியில் இருந்து 60 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.6 ஆக பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

### குரங்கம்மை தீவிரம்

# சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது அமெரிக்கா

*நியூயோர்க், ஒக. 06*

அமெரிக்காவில் குரங்கம்மை நோய் பரவல் அதிக ரித்து வரும் நிலையில் இந்நோயை பொது சுகாதார அவசரநிலையாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த முடிவின் மூலம் வைரஸ் பரவுவதைத் தடுக்க தடுப்பூசிகள், சிகிச்சைகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படுவதுடன், விரைவுபடுத்தப்படும்.

அமெரிக்காவில் இதுவரை 6,600 பேருக்கு குரங் கம்மை நோய் பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் பாதிக்கப்பட்டர்களில் 25 வீதமானவர்கள் நியூயோர்க் மாகாணத்தில் உள்ளனர். நியூயோர்க் மாகாணம் கடந்த வாரம் குரங்கம்மை சுகாதார அவசர நிலையை அறிவித்தது.

தொடர்ந்து அதிக நோயாளர்களைக் கொண்ட கலிபோர்னியா மற்றும் இல்லினாய்ஸ் மாகாணங்களும் அவசர நிலையை அறிவித்தன. இதனையடுத்தே நாடு முழுவதும் தற்போது குரங்கம்மை பொது சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு இதுவரை உலகளவில் 26,000 க்கும் மேற்பட்ட குரங்கம்மை நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

குரங்கம்மை பாதிப்புடன் அடையாளம் காணப் பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஒருபால் உறவில் ஈடுபடும் ஆண்கள் என என ஆய்வுகளில் தெரியவந் துள்ளது. எனினும் இது முற்றிலும் பாலியல் ரீதியாக பரவும் நோய்த்தொற்று அல்ல.

பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பு மூலம் பரவலாம் எனவும் சுகாதார நிபுணர்கள் தெரி வித்துள்ளனர்.

முன்னதாக உலக அளவில் குரங்கம்மை பாதிப்பு அதிகரித்து வருவதையடுத்து, குரங்கம்மை பாதிப்பை பொது சுகாதார அவசரநிலையாக உலக சுகாதார அமைப்பு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் அறிவித் தது. இதன்மூலம் அதிகபட்ச எச்சரிக்கையுடன் இருக் கும் நோய் பரவலாக குரங்கம்மை வகைப்படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

# தாய்வானைச் சுற்றி கடும் ரொக்கட் தாக்குதல் சீனாவின் மிரட்டலுக்கு அமெரிக்கா கண்டனம்!

*நியூயோர்க், ஒக. 06*

சீனாவின் கடும் எதிர்ப்புகளை மீறி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வான் பயணம் செய்த நிலையில், அதற்குப் பதிலடியாக தாய்வானைச் சுற்றி அதன் எல்லை அருகே சீனா போர்ப் பயிற்சிகளை நடத்தி வருவதுடன்,ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் சீனாவின் இந்தச் செயற்பாடு ஆத்திர மூட்டும் நடவடிக்கை என அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. தாய்வானின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்கான நீண்டகால குறிக்கோளுக்கு முரணான நடவடிக்கை இது அமைந்துள்ளதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு பேரவை தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக நான்சி பெலோசி தாய்வான் சென்று



அந்நாட்டு ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்களுடன் பேசினார்.

25 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்க பாராளுமன்றத்தின் உயர்நிலைத் தலைவர் ஒருவர் தாய்வான் சென்றது இதுவே முதல் முறையாகும்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து வரும் சீனா, இந்த விவகாரத்தில் ஏற்கனவே எச்சரித்திருந்தது போல் அமெரிக்காவுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று கூறியிருந்தது.

இந்தச் சூழலில் தாய்வான் ஜலசந்தி பகுதியைச் சுற்றிலும் சீன இராணுவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முதல் 5 நாட்கள் போர் பயிற்சியை ஆரம்பித்தது.

இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்ட ரொக்கெட் குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களின் திறன் இந்தப் பயிற்சியின் போது சோதித்துப் பார்க்கப்பட்டது. அதில், அந்த ஆயுதங்களின் செயல்பாடு எதிர்பார்த்ததைப் போல் திருப்திகரமாக இருந்ததாக தகவல்கள் வெளியானது.

இந்நிலையில், சீனாவின் இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஒரே இரவில், தாயவான் ஜலசந்தி பகுதியைச் சுற்றிலும் 11 பாலிஸ்டிக் ஏவுகணைகளை சீனா ஏவியது. இது தாய்வான் வடகிழக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கில் தாக்கத்தை ஏற்படுத்தியது என அமெரிக்க தேசிய பாதுகாப்பு பேரவை தகவல்தொடர்பு ஒருங்கிணைப்பாளர் ஜோன் கிர்பி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (அ)

# உக்ரைனில் உள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையம் அருகே ரஷ்யா தாக்குதல்!

## பேரழிவு ஏற்படலாம் என்று எச்சரிக்கை

*கீவ், ஒக. 06*

உக்ரைனில் உள்ள ஐரோப்பா வின் மிகப்பெரிய ஜபோரிஸ்ஜியா அணுமின் நிலையம் அருகே ரஷ் யப் படைகள் ரொக்கட் தாக்குதல் நடத்திய நிலையில் இவ்வாறான தாக்குதல்கள் அணுக் கசிவு பேரழிவுகளுக்கு வழிவகுக்கும் என ஐ.நா. அணுசக்தி தலைவர் மற்றும் சர்வதேச அணுசக்தி முகமை தலைமை பணிப்பாளர் ஆகியோர் எச்சரித்துள்ளனர்.

உக்ரைன் மீதான போரின் ஆரம் பத்திலேயே ஜபோரிஸ்ஜியா அணு மின் நிலையத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. தற்போது ரஷ்யாவின் மேற்பார்வையின் கீழ் இங்கு உக்ரே னிய பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஜபோரிஜியா அணுமின் நிலையத்திலிருந்து குறிப் பிடத்தக்க தொலைவில் உள்ள டினீப்பர் ஆற்றின் குறுக்கே நிகோ போல் மீது ரஷ்யப் படைகள் நேற்று 60 ரொக்கெட்டுகளை ரஷ்யா வீசித் தாக்கியதாக டினிப்ரோபெட் ரோவ்ஸ்கின் பிராந்திய ஆளுநர் வாலன்டின் ரெஸ்னிசென்கோ தெரி வித்துள்ளார். இதனால் இந்தப் பகுதியில் 50 குடியிருப்புகள் சேதமடைந் ததாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் ஜபோரிஸ்ஜியா அணுமின் நிலையத்தை சேதப் படுத்தி, 1986-ஆம் ஆண்டு ஏற் பட்ட உலகின் மிக மோசமான அணுசக்தி பேரழிவு போன்ற சம்ப வத்தை நிகழ்த்த ரஷ்யா திட்ட மிடுவதாகவும் குற்றம்சாட்டப் படுகிறது.

இந்தப் பகுதியில் ரஷ்யா வேண்டுமென்றே குண்டுகளை வீசுவதாக அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, ஜபோரிஸ்ஜியா ரயில் நிலையம் அருகே உள்ள கிரா மத்தில் உக்ரைனின் இரண்டு ஆயுதக் கிடங்குகளை ரஷ்ய படை யினர் கைப்பற்றியதாக ரஷ்ய பாது காப்புத் துறை செய்தித் தொடர்பா ளர் தெரிவித்துள்ளார். (அ)




## 100 பந்து தொடரில் விளையாட ஹசரங்கவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஓக. 06

இலங்கை கிரிக்கெட் சபை வனிந்து ஹஸரங்கவிற்கு 100 பந்து தொடரில் விளையாடுவதற்கான ஆட்சேபனை இல்லா சான்றிதழை வழங்க மறுத்தது. இதையடுத்தே அவர் இந்தத் தொடரில் ஆடும் வாய்ப்பு இல்லாமல் போனது.

இதனால், மன்செஸ்டர் அணி வழங்கிய ஒரு இலட்சம் பவுண்ஸ் - நம் நாட்டு மதிப்பில் 4.35 கோடி ரூபாய் ஒப்பந்தத்தை அவர் இழந்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் சிரேஷ்ட அதிகாரியான ஏஷ்லி டி சில்வா, வனிந்து ஹஸரங்கவை ஆசியக் கிண்ண தொடருக்கு உடல்நிலை மற்றும் உளநிலை அடிப்படையில் சிறந்த முறையில் தயார்படுத்தும் நோக்குடனேயே, அவருக்கு 100 பந்து தொடரில் விளையாடும் சந்தர்ப்பத்தை வழங்கவில்லை எனத் தெரிவித்திருக்கின்றார்.

இதேநேரம் அடுத்த ஆண்டுக்கான (2023) 100 பந்து தொடரில் மன்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணிக்கு விருப்பம் இருப்பின், வனிந்து ஹஸரங்கவை அவர்களது அணியில் தொடரில் தக்கவைத்திருக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேநேரம் வனிந்து ஹஸரங்கவின் பிரதியீட்டு வீரராக மன்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணி தென்னாபிரிக்க அணியின் அதிரடி துடுப்பாட்டவீரர் ட்ரிஸ்டான் ஸ்டேப்சினை ஒப்பந்தம் செய்திருக்கின்றது. (ஐ)

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டி; பட்மின்ரனில் இலங்கைக்கு வெற்றி!

பர்மிங்ஹாம், ஓக. 06

இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவின் ஏழாவது நாள் நிறைவில் இலங்கை பதக்கங்களை வெல்லாத போதும், வெற்றிகள் பலவற்றை குவித்துள்ளது.

இதில் பட்மிண்ரன் போட்டிகளில் தனிநபர், கலப்பு இரட்டையர் மற்றும் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவுகளில் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளதுடன், கடற்கரை கரப்பந்தாட்டத்தில் இலங்கை ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ஆண்களுக்கான தனிநபர் பட்மிண்ரன் இரண்டாவது சுற்றில் பார்படோஸ் வீரர் ஷே மைக்கல் மார்ட்டினை எதிர்கொண்ட இலங்கை வீரர் நிலூக கருணாரத்ன 2-0 என இலகுவான வெற்றியை பெற்று, மூன்றாவது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார்.

போட்டியின் இரண்டு செற்களிலும் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர் 21-6 மற்றும் 21-5 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றார்.

இதேநேரம் மற்றுமொரு வீரரான துமிந்து அபேவிக்ரம இரண்டாவது சுற்றில் மால்டா வீரர் சாமுவெல் கேஸரை 2-0 என வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றார். இவர் 21-12 மற்றும் 22-20 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றிருந்தார்.

அடுத்த சுற்றில் துமிந்து அபேவிக்ரம இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த்தை எதிர்கொள்ளவுள்ளதுடன், நிலூக கருணாரத்ன சிங்கப்பூர் வீரர் ஜியா ஹெங் தேவை எதிர்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் கலப்பு இரட்டையர் பிரிவுக்கான இரண்டாவது சுற்றில் பங்கேற்ற இலங்கையின் சச்சின் டயஸ் மற்றும் திலினி ஹெந்தேவா ஆகியோர், கனடா அணியை எதிர்த்து 2-0 என வெற்றிபெற்றுள்ளனர்.



இலங்கை அணியானது 21-11 மற்றும் 21-18 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றதுடன், இறுதி 16 அணிகளுக்கான சுற்றில் தென்னாபிரிக்க அணியை இன்று எதிர்கொள்ளவுள்ளது.

இதேநேரம் பட்மிண்ரன் போட்டிகளில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் பார்படோஸை 2-0 என வீழ்த்திய இலங்கை ஆடவர் இரட்டையர் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. சச்சின் குணதிலக்க மற்றும் புவனேக குணதிலக்க ஆகியோர் பார்படோஸ் அணியை 21-12 மற்றும் 21-9 என வீழ்த்தினர். இவர்கள்

இருவரும் தங்களுடைய அடுத்தப்போட்டியில் மாலைத்தீவுகள் அணியை எதிர்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை பெண்களுக்கான தனிநபர் இரண்டாவது சுற்றில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை விதுரா சுஷானி, இங்கிலாந்து வீராங்கனை பிரேயா ரெட்பனிடம் 0-2 என தோல்வியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பொதுநலவாய கிரிக்கெட் வெளியேறியது இலங்கை!

பர்மிங்ஹாம், ஓக. 06

பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் இருபது - 20 தொடரில், நேற்று முன்தினம் தமது இறுதி குழுநிலைப் போட்டியில் தென்னாபிரிக்காவிடம் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 10 விக்கெட்களால் மோசமான தோல்வியை சந்தித்துள்ளது.

இந்த தொடரில் குழு பி இல் உள்ள இலங்கை அணி ஏற்கனவே தாம் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுடன் விளையாடிய போட்டிகளில் தோல்வியடைந்த நிலையில் தென்னாபிரிக்காவை எதிர்கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க மகளிர் அணி முதலில் இலங்கை வீராங் கனைகளை துடுப்பெடுத் தாடப் பணித்தது.

இதன்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி தென்னாபிரிக்க வீராங்கனைகளின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 17.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட் களையும் பறிகொடுத்து வெறும் 46 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இது இலங்கை மகளிர் அணி ரி- 20 போட்டிகளில் பெற்ற அதிகுறை வான ஓட்டங்களாகவும் பதிவானது.

இலங்கை மகளிர் அணியின் துடுப்பாட்டம் சார்பில் சாமரி அத்தபத்து 15ஷ ஓட்டங்களை எடுத்ததோடு, அவர் மாத்திரமே அணியில் இரு வரிசை இலக்க ஓட்டங்கள் பெற்ற வீராங் கனையாகவும் மாறினார்.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு அடுத்த தோல்வி மறுமுனையில் தென்னாபிரிக்க பந்துவீச்சில் நடைன் டி கிளர்க் வெறும் ஓர் ஓட்டத்தை மாத்திரம் விட்டுக்கொடுத்து 3 விக்கெட் களைச் சாய்க்க, மசாபடா கிளாஸ் 2 விக்கெட்களை சுருட்டினார்.

தொடர்ந்து போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 47 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி, வெறும் 6.1 ஓவர்களில் போட்டியின் வெற்றி இலக்கை விக்கெட் இழப்பின்றி 49 ஓட்டங்களுடன் அடைந்தது.

தென்னாபிரிக்க மகளிர் அணியின் வெற்றியை உறுதி செய்த அதன் துடுப்பாட்டத்தில் டஸ்மின் பிரிட்ஸ் 21 ஓட்டங்களையும் அன்னகே போஸ்ச் 20 ஓட்டங் களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இந்தப் போட்டியின் தோல்வியோடு இலங்கை மகளிர் அணி தொடரில் மூன்று தொடர் தோல்விகளை பதிவு செய்ய, தென்னாபிரிக்க மகளிர் அணிக்கு இது தொடரில் முதல் வெற்றியாக மாறுகின்றது. (ஐ)





## இந்தியா - மேற்கிந்தியா 4ஆவது போட்டி இன்று!

புளோரிடா, ஓக. 06

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளும் 5 போட்டிகள் கொண்ட 20 ஓவர் போட்டி தொடரில் மோதி வருகின்றன. முதல் மற்றும் 3ஆவது போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றது. 2ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது. இதனால் 20 ஓவர் தொடரில் இந்தியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் 4ஆவது மற்றும் 5ஆவது போட்டி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் லாடர்ஹில்லில் நடக்கிறது.

4ஆவது போட்டி இன்று நடக்கிறது. இந்தப் போட்டி இந்திய நேரப்படி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது. இப்போட்டியில் வென்று தொடரை கைப்பற்றும் முனைப்பில் இந்திய அணி உள்ளது. ரோஹித் சர்மா தலைமையில் இந்திய அணியில் சூர்யகுமார் யாதவ், ஸ்ரேயாஸ் ஐயர், ரிஷப் பந்த் ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், அர்ஷ்தீப்சிங், அஸ்வின் உள்ளனர். சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யாவும் தனது பங்களிப்பை அளித்து வருகிறார்.

பூரண் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் பிரண்டன் கிங், மேயர்ஸ், போவெல், ஹெட்மர், ஹோல்டர், ஜோச், மெக்காய் உள்ளனர். அந்த அணி வெற்றி நெருக்கடியுடன் களம் இறங்குகிறது. தோல்வி அடைந்தால் தொடரை இழக்க வேண்டும் என்ப தால் வெற்றிக்காக மேற்கிந்தியத்தீவுகள் அணி போராடும்.

# சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட எரிபொருள் அனுமதி

கொழும்பு, ஓக. 06

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட எரிபொருள் அனுமதிச் சீட்டுக்களை வழங்குவது தொடர்பில் சுற்றுலா அமைச்சு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை சந்தித்து கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விமான நிலையத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட எரி பொருள் அனுமதிச் சீட்டு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்தவுடன் விமான நிலையத்தில் எரிபொருள் அனுமதிச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டணத்தை டொலரில் செலுத்தவேண்டும்.

அதேவேளை எரிபொருள் அட்டை ரொப்-அப் முறையின் கீழ் இயக்கப்படும்.

மேலும் இந்த சுற்றுலா எரிபொருள் அட்டைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் ஒரு எரிபொருள் வழங்கும் பம்ப் ஒதுக்கப்படும்-என்றார். (அ)

# பொதுஜன பெரமுன ஆட்சி அமைந்தால் மீண்டும் போராட்டங்கள் தீவிரமடையும்!

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 06

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மக்கள் போராட்டம் மீண்டும் தீவிரமடையும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம் என லங்கா சம சமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

சர்வகட்சி அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆதிக்கம் கொள்ளக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வகட்சி அரசாங்கத்தின் ஸ்தாபிப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் விசேட சந்திப்பு இடம்பெறவுள்ளது. சர்வகட்சிகளையும் ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்தால் அரசியல் நெருக்கடிக்குக்கு சற்று தீர்வு காண முடியும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவில்லாமல்,எந்த அரசாங்கத்தையும் ஸ்தாபிக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளமை அவதானத்திற்குரியது.

தான்தோன்றித்தனமான செயற்பாடுகள்,பேச்சுக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை குறுகிய காலத்திற்குள் பலவீனப்படுத்தியது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றினைத்து ஸ்தாபிக்கப்படும் சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதிக்கம் கொள்ளக்கூடாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொடர்பில் மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மக்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுப்படுவார்கள்.

தேர்தல் ஒன்றை நடத்த முடியாத நிலையில் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்கும்போது ஒரு அரசியல் கட்சி மாத்திரம் ஆதிக்கம் கொள்ளும் போது சர்வக்கட்சி அரசாங்கத்தின் நோக்கம் முரண்பட்டதாக அமையும்.

சர்வகட்சி அரசாங்கத்தின் வியூகம் தொடர்பில் ஜனாதிபதியிடம் தீர்க்கமான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம். அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கை 30ஆக வரையறுக்கப்பட வேண்டும்,அரச செலவுகள் இயலுமான அளவு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம்-என்றார். (அ)

# மரண அறிவித்தல்



மலர்வு 20 - 11 -

உதிர்வு 02 - 08 - 2022

## சின்னத்துரை பத்மநாதர்

யாழ். வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Torcy ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பத்மநாதர் அவர்கள் 02.08.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை, பவளம் தம்பதிகளின் செல்வப் புதல்வரும், மாதகலைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசையா, பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும்,சந்திரா அவர்களின் அன்புக் கணவரும்,வினோத் அவர்களின் அன்புத் தந்தையும்,நளாஜினி அவர்களின் அன்பு மாமனாரும்,பரராஜசிங்கம்(கனடா), குணசிங்கம் (சுவிஸ்), மனோரஞ்சிதம்(கனடா), நிர்மலாதேவி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,மலர்(கனடா), தங்கராஜா(கனடா), லோகேஸ்வரி, விஜயகுமார்(கனடா), காலஞ்சென்ற பத்மாதேவி(இலங்கை), செந்தில் செல்வன்(இலங்கை), கலைச்செல்வன்(பிரான்ஸ்), கமலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,அபிலாஷா அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 06 Aug 2022 3:00 PM - 4:00 PM
Sunday, 07 Aug 2022 3:00 PM - 4:00 PM
Monday, 08 Aug 2022 3:00 PM - 4:00 PM
Tuesday, 09 Aug 2022 3:00 PM - 4:00 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

கிரியை
Wednesday, 10 Aug 2022 9:00 AM - 11:00 AM
Funérarium 95, Rue Marcel Sembat 93400 Villetaneuse

தகனம்
Wednesday, 10 Aug 2022 11:00 AM - 12:30 PM
Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தவம் - சகோதரன்.**

தொடர்புகளுக்கு:
**வினோத் - மகன்** Mobile : +33760716060
**கலைமான் - மைத்துனர்** Mobile : +33663372951
**தவம் - சகோதரன்** Mobile : +33758051652
**குருபரன் - மைத்துனர்** Mobile : +33646548500

# ஜப்பான், தென் கொரியா ஆகியன இலங்கைக்கு உதவுவது கட்டாயம்!

## ஆசிய மன்றம் வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 06

ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள், இலங்கைக்கு தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உதவ வேண்டும் என பொருளாதார ஒத்துழைப்புக்கான ஆசிய மன்றம் வலியுறுத்தியுள்ளது.

ஆசிய மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கையில் பொருளாதார சரிவு 22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கைத்தீவு, முன்னொருபோதும் இல்லாத வகையில் பொருளாதார சரிவை எதிர்கொள்கிறது.

ஜூலை மாதத்தில் பணவீக்கம் 60.8 வீதமாக உயர்ந்துள்ளது, மேலும் அந்நிய செலாவணி கையிருப்புக்கு மத்தியில் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளின் கடுமையான பற்றாக்குறையை நாடு இன்னும் எதிர்கொள்கிறது.

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் இருந்து, மிக அத்தியாவசியமான இறக்குமதிகளுக்குக்கூட நிதியளிக்க முடியாத அளவு அந்நியச் செலாவணியில் பற்றாக்குறை நாட்டில் உள்ளது. ஏறக்குறைய ஒரு வருடமாக இலங்கை மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதுவரை கிடைத்த இறையாண்மை கொண்ட நாடுகளின் உதவி போதுமானதாக இல்லை. அவசர தேவை இருந்த போதிலும் சர்வதேச நாணய நிதியத்துடனான் பிணை எடுப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள பல மாதங்கள் ஆகும்.ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள், ஆசியாவின் இரண்டாவது மற்றும் நான்காவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள நாடுகளாகும்.

இந்த நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், விரைவான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், அதன் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தவும் ஜப்பான் மற்றும் தென் கொரியா உதவுவது கட்டாயம். இலங்கை மக்கள் நிச்சயமாக சிறந்த மற்றும் பிரகாசமான எதிர்காலத்திற்கு தகுதியானவர்கள்- என்றுள்ளது. (அ)

# ஜனாதிபதி மாளிகைக்குள் முதலில் நுழைந்த 2 இளைஞர்களுக்கு பிணை

கொழும்பு, ஓக. 06

கடந்த ஜூலை 09ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் முதலில் நுழைந்த இரண்டு இளைஞர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டிருந்த இருவரும் கோட்டை நீதவான் திலிண கமகேயின் வீட்டில் முன்னிலைப் படுத்தப்பட்டிருந்த போது இருவரையும் பிணையில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இளைஞர்கள் இருவரும் ரத்தொளுகமை மற்றும் கடவத்தை பிரதேசங்களில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (அ)

## அடுத்த...

முன்மொழிவுக்கு செவிசாய்க்க வேண்டும். இந்த மொழிவுகள் தொடர்பில் பாராளு மன்றம் முடிவு எடுக்க முடியும். அரசாங் கங்கள் மற்றும் அரச பொதுக் கொள்கை களில் ஏற்படும் மாற்றங்கள் என்பவை சர்வதேச நாணய நிதியத்துடனான பேச் சுக்களில் நாம் எதிர்கொள்ள வேண்டிய அடிப்படை பிரச்னையாகும்.

**ஐ. எம். எவ்வுடன் ஒப்பந்தம்**

அடுத்த 6 மாதங்களும் நாம் கண்டிப் பாக கடும் சிரமங்களை சந்திக்க நேரிடும். சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழி யர்கள் அளவிலான ஒப்பந்தத்தை எட்டு வதைத்தவிர, இந்தச் சூழ்நிலையில் இருந்து மீள வேறு தீர்வு இருப்பதாக நான் நினைக்கவில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். அது நல்லதா கெட்டதா என் பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**புவிசார் அரசியலில் சிக்காமல் பயணம்**

பொருளாதார நெருக்கடியால் பாதிக் கப்பட்ட மக்கள்மீது கவனம் செலுத்தப் பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியமும் ஒப்புக்கொள்கிறது. நாடு, முத லில் வெளிநாட்டுக் கடன் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், ஆசிய பிராந்தியத்தின் புவிசார் அரசிய லில் சிக்கிக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும்.

நாம் அதிகளவான கடன் தொகையை மீள செலுத்தவேண்டியுள்ளது. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, அணுசக்தி பயன்பாடு ஆகிய துறைகள் தொடர்பில் சம்பிரதாய கட் டமைப்புக்கு வெளியே சிந்திக்க வேண் டும்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்தாமல், நாட்டின் எதிர்காலத்தை சீரமைக்க முடியாது.

தற்போது, இலங்கை செய்ய வேண்டிய முதல் பணி பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்துவதாகும். 1997 ஆம் ஆண்டு ஆசிய நிதி நெருக்கடி மற்றும் தாய்லாந்து பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் அவர்களுக்கு வழிகாட்டியது.

அண்மையில் நான், மகாநாயக்க தேரர் களை சந்தித்த போது, விகாரைகளை மையப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேரர்கள் ஒப்புக்கொண் டனர். அண்மைக் காலமாக, உள்ளவர் களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடை யேயான இடைவெளி அதிகரித்து வரு கிறது.

**உலகின் போக்கை புரிதல்**

கொரோனா மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, பாடசாலை கல்வி தடைப்பட்டுள்ளது. இதனை, விரைவில் இயல்பு நிலைக்கு மீட்டெ டுக்க வேண்டும். முதலாவதாக, பொருளா தார ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம், சமூக ஸ்திரதன் மையை உருவாக்க முடியும். விவசாயம் மற்றும் மீன்பிடித் துறையை நவீன மய மாக்குதல், உற்பத்தியில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல், கால நிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பு களைத் தணித்தல், பெண்கள் எதிர்கொள் ளும் பிரச்னைகள், மக்களின் வீட்டுத் தேவைகள், கிராமப்புறங்களில் உள்ள வறுமை போன்றவற்றில் கவனம் செலுத் தப்பட வேண்டும்.

அதிக ஊதியம் பெறும், அதிக உற் பத்தி திறன் கொண்ட போட்டிப் பொரு ளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். பெரியளவில் அதிகரித்து வரும் சந்தை களைக் கொண்ட, ஆசிய நாடுகளுடன், வர்த்தக உறவுகளை உருவாக்க வேண்டும். தற்போதைய உலகப் பொருளாதாரச்சூழல், எந்த நாட்டுக்கும் சாதகமாக இல்லை - என்றும் அவர் கூறினார். (அ -ஐ)

## அமெரிக்க...

எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை இராஜதந்திர மொழியில் 'டிமாஷ்' என்று கூறுவார்கள். இவ்வா றானதொரு சம்பவம் இடம்பெற்றால், அது இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக நிகழும் என்றும், இரு நாடு களுக்கும் இடையிலான உறவில் பாதக மான தாக்கத்தை ஏற்படுத்தும் சம்பவ மாக இது அமையும் எனவும் அந்த வட் டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை சர்வதேச நாணய நிதியத் திடம் ஆதரவு கோரிய வேளையில், அந்த நிதியில் வலுவான செல்வாக்கு செலுத்தக்கூடிய மற்றும் அதற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் அமெரிக்கா போன்ற நாடு ஆட்சேபனை தெரிவிப்பது, இலங்கைக்கு மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும்.

ஜெனிவா மனித உரிமைகள் பேர வைக்கு சொந்தமான மத்திய குழு நாடு களில் அமெரிக்காவும் உள்ளது. இதன் மூலம், ஜெனிவாவிலும் பெரும் செல் வாக்கை செலுத்த முடியும் என்றும் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் விவகாரத்தில் இந்தியா வும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சீனாவின் கப்பலில் அதி நவீன சாதனங் கள் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறப்படுகின்றது. அந்த நாடு சீனா வுக்கு தெளிவான செய்தி ஒன்றை வழங்க வுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ஐ - சி)

## கனிமொழியை...

பங்கேற்பதற்காக புதுடில்லிக்கு வந்தி ருந்த தமிழ்நாட்டை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரான கனி மொழியை மிலிந்த மொறகொட நேற்று திடீரென சந்தித்துப் பேச்சு நடத்தியுள் ளார்.

இதன்போது, இலங்கையின் தற்போ தைய பொருளாதார நெருக்கடியை உணர்ந்து, தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய மனிதாபிமான உதவிகளுக்கு இலங்கை மக்களின் சார்பாக மிலிந்த மொறகொட நன்றி தெரிவித்தார்.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான மிக நெருக்கமான இன, மத மற்றும் கலாசார தொடர்புகள் குறித்த கருத்துக்களை இருவரும் பரிமா றினர். இவற்றை மேலும் வலுப்படுத்து வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

தனது பாராளுமன்ற உரைகள் அடங் கிய புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப் பின் பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழியிடம் மிலிந்த மொறகொட வழங்கினார்.

2006ஆம் அண்டு மறைந்த முன்னாள் முதல்வர் மு. கருணாநிதிக்கு இதே நூலின் பிரதியை வழங்கியமையை கனிமொழி யிடம் மிலிந்த மொறகொட நினைவு கூர்ந்தார்.

மிலிந்த மொறொடவுடன் துணைத் தூதுவர் நிலுகா கதுருகமுவ மற்றும் புது டில்லியில் உள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரி காமினி சரத் கொடகந்த ஆகி யோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

## கோட்டா கோ...

லையான மேலதிக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இது குறித்து பொலிஸ்மா அதி பருக்கு உடனடி உத்தரவை பிறப்பிக்க வுள்ளதாக தெரிவித்துள்ளார்

எனினும், இடைக்கால பகுதியில் அந் தப் பகுதியில் காணப்படும் தற்காலிக கூடாரங்களை அகற்றுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தாங்களாக முன்வந்து அந்த பகுதியி லிருந்து வெளியேற முயல்பவர்களை தடுக்கும் விதத்தில் சட்டமா அதிபரின் வாக்குறுதிகள் அமையாது என நீதிமன் றம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஒக்ரோபர்...

அனைத்தையும் தெரிவிக்கிறேன் என்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருந்து வெளியேறும் நாளை சரியாக கணித்த கணிப்பாளர் தான் என்றும் சரச்சந்திர மேலும் தெரிவித்துள்ளார்.

### ஈஸ்டர் தாக்குதல் சமயத்தில்:

# பயங்கரவாத தடை சட்டத்தில் கைதான இருவர் விடுதலை!

மன்னார், ஒக. 06

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தலை தொடர்ந்து பயங்கரவாத சட்டத் தின் கீழ் கைதான மன்னார் பள்ளி முனையை சேர்ந்த நபர் ஒருவரும் தள் ளாடி இராணுவ முகாமை சேர்ந்த அதி காரி ஒருவரும் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

தனது உடைமையில் பீரங்கிக்கு பயன்படுத்தும் திரியை வைத்திருந்த குற்றச்சாட்டில் பள்ளிமுனையை சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப் படையில் அவருக்கு குறித்த பீரங்கி திரியை வழங்கிய குற்றச்சாட்டில் தள் ளாடி இராணுவ முகாமை சேர்ந்த அதி காரி ஒருவரும் 2019ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் விடுதலை செய்யக்கோரி அல்லது பொலிஸார் ஊடாக பயங்கரவாத தடுப்புச் சட் டத்தை நீக்கக் கோரி சட்டத்தரணி எஸ். டினேசன் கடந்த இரண்டு வருடங்களாக வழக்காடி வந்தார். இவர்களுக்கு பிணை நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்று அவர்களை விடு தலை செய்ய முடியும் என்று தெரிவிக்கப் பட்டத.

இதையடுத்து, சட்டத்தரணி எஸ். டினேசன் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு நினைவூட்டல் கடி தங்கள் அனுப்பப்பட்டதோடு நேரடி யாகவும் சட்டமா அதிபர் திணைக்களத் தில் ஆலோசனை கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் குறித்த வழக்கு காலம் தாழ்த்தப்பட்ட நிலையில் உயர் நீதி மன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய தயார் நிலையில் இருந்த சமயம், வழக்கு தொடர்பான விபரங் களை பரிசீலித்த சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த இருவரையும் விடு தலை செய்வதற்கான கடிதத்தை நேற்று முன்தினம் மன்னார் நீதிவான் நீதிமன் றத்துக்கு அனுப்பி வைத்தது.

இதைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக் கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு இருவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார் மன்னார் நீதி வான். (ஐ)

## சர்வகட்சி...

அமைப்பதற்கான பேச்சுக்காக ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஐக்கிய மக்கள் சக்தியை அழைத்திருந்தார். இந்தப் பேச்சில் அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பங்காளிக் கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணே சன், பிரதி தலைவர் வேலுசாமி இராதா கிருஷ்ணன், சிறீ லங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்ரஸ் தலைவர் ரிஷாத் பதியு தீன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

பேசப்பட்ட விடயங்கள் குறித்து வீ. இராதகிருஷ்ணன் எம். பி. கூறுகையில், "சர்வகட்சி அரசாங்கம் என்பதை நாம் நிராகரிக்கின்றோம். மாறாக சர்வகட்சி நிர் வாகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம்.

சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்பதற்கு நாம் தயாராக இல்லை. பாராளுமன்றத்தில் கண்கா ணிப்பு குழுக்கள் நியமிக்கப்பட வேண் டும். அந்தக் குழுக்கள் அதிகாரம்மிக்க தலைமைத்துவப் பதவியை வகிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஒரு வருட காலத்துக்கு இவ்வாறான சர்வகட்சி நிர்வாகத்தில் எவ்வித ஊதியமும் , கொடுப்பனவும் இன்றி பணியாற்ற நாம் தயாராக இருக்கின்றோம்.

இவை தவிர தற்போது நடைமுறை யிலுள்ள உள்ள அவசர நிலைமை உட னடியாக இரத்து செய்யப்பட வேண்டும் என்றும் , ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழில்சங்க தலைவர்களின் கைதுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்பதை யும் சுட்டிக்காட்டினோம். விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிவித்து அது குறித்த நடவடிக்கைகளை முன்னெ டுப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்." என்றார். (ஐ)

## வார இறுதி...

வெட்டு நடைமுறைக்கு வராது. இதே நேரம், வாரநாட்களில் இனி இரவு வேளைகளில் மட்டும் ஒரு மணி நேரமே மின்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அரச ஊழியர்...

வித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்களும், ஓய்வூதி யர்களும் அடையாள அட்டை, ஓய்வூ திய அடையாள அட்டையை உறுதிப் படுத்தலுக்காக கொண்டு செல்வது கட் டாயம். கியூ. ஆர். குறியீட்டு முறைமை அடிப்படையிலேயே எரிபொருள் விநி யோகிக்கப்படும். கடந்த முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை எரிபொருள் பெற்றவர்கள் இதற்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள்.

ஒவ்வொரு எரிபொருள் நிலையத்தி லும் 1500 மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் வழங்க முடியும். ஆண்கள், பெண்கள் தனித்தனியான வரிசைகளில் எரிபொருளை வழங்க எரிபொருள் நிலைய முகாமையாளர்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், மாவட்டத்தில் 23 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 6 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சுகாதார உத்தி யோகத்தர்களுக்கும் மிகுதி 17 எரிபொ ருள் நிரப்பு நிலையங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆஸிக்கு...

படைக் கப்பலில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய எல்லைப் படையின் தெற்காசியாவுக்கான பிராந் திய பணிப்பாளர் கட்டளை அதிகாரி கிறிஸ் வோட்டர்ஸ், ஆட்கடத்தலை தடுப்பதில் இலங்கை பங்காளிகளுட னான உறவை அவுஸ்திரேலிய அர சாங்கம் உயர்வாக மதிப்பதாகக் குறிப் பிட்டார்.

இதேவேளை, கடந்த 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் சட்டவிரோத மாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவே சிக்க முயற்சித்த அனைவரும் திருப்பிய னுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரி வித்தார். (ஐ)

## ஜனநாயக...

மேலும், ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு வருவேன். போராட்டம் அரசியல் பாதையை தெரிவுசெய்தால், அது வேறு பாதையில் செல்கின்றது. இந்த நாட்டில் நாம் வெற்றி பெறக்கூடிய அரசிய லமைப்பு உள்ளது. அதனை தாண்டிச் செல்வோம் என்ற நம்பிக்கை இல்லை. கடந்த காலங்களில் இதற்கான பாடங் கள் நிறையவே உள்ளன.

அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக் கில் எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை. நாட்டில் அரசியல் மற்றும் கலாசார அடித்தளத்துடன் ஆட்சிக்கு வரலாம். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப தேவையான அனைத்து ஆதரவையும் நாம் வழங்குவோம். ஜன நாயக வாக்களிப்பு முறையில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் - என்றார்.

ஈழநாடு
Eelanadu

# கைது செய்யப்பட்ட ஜோசப் ஸ்டாலின் விடுவிக்கப்படும் வரை போராடுவோம்

## ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு

கொழும்பு, ஓக. 06

**"பழிவாங்கும் நோக்குடன் கைதுசெய்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்."**

- இவ்வாறு ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ஜோசப் ஸ்டாலின் விடுவிக்கப் படும் வரைக்கும் நாடெங்கும் நாள் தோறும் எதிர்ப்புப் போராட்டங் கள் முன்னெடுக்கப்படும் என்றும் ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் மற்றும் இலங்கை மக்கள் ஆசிரியர் சங்கம் என்பன கூட்டாக மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளன. (அ)

## செப்ரெம்பர் முதல் வாரத்தில் இடைக்கால பட்ஜெட் வருகிறது

கொழும்பு, ஓக. 06

எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் இடைக் கால வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றில் முன்வைக்க உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்த அறிவிப்பை ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது. (அ)

## அடுத்த வாரம் வியாழனுக்கு பதில் புதன்கிழமை பாடசாலை நடக்கும்

கொழும்பு, ஓக. 06

அடுத்த வாரம் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் கிழமை என மூன்று நாள்கள் பாடசாலை இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாட சாலைகள் எதிர்வரும் வியாழக்கிழமை போயா விடு முறை என்பதால் அடுத்த வாரம் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் (வியாழனுக்குப் பதிலாக) இடம் பெறும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## அடுத்த வாரம் முதல் 5 நாள்களும் வடக்கில் பாடசாலைகள் இயங்கும்

யாழ்ப்பாணம், ஓக. 05

எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் வாரத்தின் 5 நாட்க ளும் பாடசாலைகள் திறக்கப்படும் என்று வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே நாடளாவிய ரீதியில் வாரத்தின் மூன்று நாட்கள் பாடசாலைகள் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ள நிலையில் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. (அ)

# ரணிலுக்கு டலஸ் நிபந்தனை

கொழும்பு, ஓக. 06

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வினால் முன்மொழியப்பட்ட சர்வ கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும நிபந்தனை களை விதித்துள்ளார்.

ஜனாதிபதி விக்ரமசிங்க கடந்த வாரம், சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க இணையுமாறு பாராளு மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத் தும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

தேசிய மக்கள் சக்தி அவரது அழைப்பை நிராகரித்துள்ளது. அதே நேரத்தில் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவை வழங்குவதாகக் கூறியுள் ளது.

இந்த நிலையில் பாராளு மன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் அவரது குழுவினர் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங் கவை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரை



யாடியுள்ளனர்.

இதன்போது டலஸ் அழகப்பெ ரும தெரிவிக்கையில்-

இதன்போது, பொருளாதார ஸ்திரத்தன்மையின் அடிப்படையில் நாடு சிக்கலான நிலைமையில் இருப் பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

அதனால் தற்போதைய அமைச் சரவையில் புதிய பதவிகள் எதுவும் உருவாக்கப்படக்கூடாது என்று நாம் பரிந்துரைக்கிறோம். அத்துடன் இராஜாங்க மற்றும் பிரதி அமைச் சர்கள் நியமிக்கப்படக் கூடாது.

ஒரு குழுவாக நாங்கள் எந்த அமைச்சுப் பதவிகளையும் ஏற்க மாட்டோம் என்றாலும், சர்வகட்சி அரசாங்கத்தின் யோசனையுடன் உடன்படுவோம்.

பாராளுமன்றம் தொடர்பான துணைக் குழுக்களில் பணியாற்ற விரும்பும் அதேவேளை, பாராளு மன்றம் தொடர்பான விடயங்களில் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு கல்வியை மீட்டெடுப்பது முதன்மையான முன்னுரிமை திட்ட மாக இருக்க வேண்டும்-என்றார். (அ)

# தியானம், தவம் செய்வதன் மூலம் ஊழல்வாதிகளை விரட்டமுடியாது

## கூறுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஓக.06

உலகப் போராட்டங்கள் அமைதியா னவை அல்ல என்றும், தியானம் செய்வ தன் மூலமும், தவம் செய்வதன் மூலமும் ஒரு நாட்டில் வஞ்சகர்களை விரட்ட முடி யாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள் ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம் போரா டுவது சாத்தியமில்லை என தெரிவித்த பொன்சேகா, எமது இலக்குகளை அடைய வெளியில் சென்று போராட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போராட்டத்தின்போது உயிர் தியா கம் செய்ய வேண்டும் என்றால் அதற்கும் தயாராக வேண்டும். அப்போது உயிர் தியாகம் செய்தவர்களை மக்கள் மாவீரர் களாக கொண்டாடுவார்கள்.

போராட்டக்காரர்களைச் சுட்டுக் கொன்றால் 20 முதல் 25 பேர் வரை இறக்க நேரிடும். இதுபோன்ற தாக்கு தல்களால் போராட்டத்தை நிறுத்த முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வ தேச சமூகம் தலையிட்டு வான் தாக்கு தல்களை நடத்தலாம். இராணுவ தலை மையகத்தைக்கூட அழிக்க முடியும். மத்திய கிழக்கு நாடுகளில் இதற்கான உதாரணங்கள் உள்ளன.

மக்கள் மீது தாக்குதல் நடத்தினால்



இது போன்ற சம்பவங்கள் நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்று அரச பயங்கரவாதம் செயற் படுகிறது. சில இளைஞர்கள் சிறையில் உள்ளனர்.

சிலர் தலைமறைவாக உள்ளனர்.

மக்கள் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பான கட்டளைகளை பின்பற்ற வேண்டாம் என நான் பலமுறை இரா ணுவத்திடம் வலியுறுத்தினேன். இரா ணுவம் அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டும்.

போராட்டத்துக்குள் பல்வேறு குழுக் கள் உள்ளன. பணம் பெறும் குழுக்களும் உள்ளன. அரசியல்வாதிக ளுடன் இர வோடு இரவாக போராட்டக் களத்தில் நிற்கும் குழுக்களும் உள்ளன.


போராட்டம் ஆயுதப் போராட்ட மாக இல்லாமல் இருந்தால் நல்லது.

ஆட்சியாளர்கள் ஊழல் செய்தால் தூக்கி எறியவேண்டும் போராட்டத் துக்காக யாருடனும் பேசத் தயார்-என்றார். (அ)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவையொட்டி
ஓம் ரிவி நடாத்தும்

**சைவம் தழைத்தோங்க....**
**சமய அறிவுப் போட்டி**

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி டான் குழுமத்தின் ஓம் தொலைக்காட்சியால் சைவம் தழைத்தோங்க.... என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் இவ்வாண்டும் முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்களின் சைவசமய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாண்டு 'சைவக்களஞ்சியம்' என்ற தலைப்பிலான – சமய அறிவுப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.



செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் நடாத்தும் சமய அறிவுப்போட்டி ஆலய வடகிழக்கு வீதியில் அமைந்திருக்கும் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தினமும் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.



**போட்டி தொடர்பான விதி முறைகள்**

பாடசாலை மாணவர் மாத்திரமே போட்டியில் பங்கேற்கலாம்.

கேள்விகள் சைவசமய அறிவு சார்ந்த விடயங்களாகவும் பொதுவான அறிகை சார்ந்ததாகவும் இருக்கும்

வினாக்கள் பெரும்பாலும் தரம் 06 – தரம் 11 சைவநெறி பாடநூலை மையப்படுத்தியதாக அமையும்.

விடை வழங்குவதற்கு 10 செக்கன்கள் அவகாசம் வழங்கப்படும்.

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்பும் மாணவர்கள் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்கு நேரடியாக வந்து கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 075 3132 804

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து



7.15 மணி : கதைவழி அறமொழி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE-சம்சாரம் அது மின்சாரம்
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்
05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை



**இரவு**

07.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்



07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு